0790.



சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

சர்வதேச இந்துமத குருபீடம்

இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்

கொழும்பு

ஸ்ரீலங்கா

SRILANKA

INTERNATIONAL HINDU RELIGIOUS GURUPEEDAM

99.09-27

ஆசிரியர்

: கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200/0790.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'



## இலங்கை இந்துமத குருபீடாதிபதி

'சிவாகம ஞானி – சிவாச்சார்ய சிம்மம்'

யாழ் – நாயன்மார்கட்டு

## கலாநிதி அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

அவர்களின் ஞாபகார்த்தமாக

சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

எனும் ஆன்மீக மலர் வெளியிடப்படுகிறது என்பதனை
ஆஸ்தீக அன்பர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி

**கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸன் சர்ம்பசிவ சிவாச்சாரியார்**

(அகில இலங்கை சமாதான நீதவான்)

தலைவர் - இலங்கை பிராம்மண சமாஜம்

- ஸ்தாபக தலைவர் -

**சர்வதேச இந்துமத குருபீடம**

90/22, ஜோசப் டயஸ் லேன், புளுமெண்டால் றோட் – கொழும்பு – 15

Telephone & Fax : 527025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

அருள் ~ 02 ஆடி ~ ஆவணி ~ 1999 ஜோதி ~ 23

ஆசிரியர் : கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் . ஜே. பி.

## மலர்ந்த புஷ்பங்கள்

1. ஆசியுரை, அருளுரை

2. உள்ளம் பெருங்கோயில் ~ சாம் சண்முகநாத சிவாச்சாரியார்

3. காளி தேவியின் ரூப பேதங்கள் ~ து. மணிவண்ண சிவாச்சார்யார்

4. இராமன் பேசுகிறான் ~ டாக்டர் நஜன்

5. மனித வாழ்வில் நவரஸங்கள் ~ ஸ்ரீ லக்ஷ்மீ

6. ஸ்ரீ வரலக்ஷ்மீ விரத மஹிமை ~ ஸ்ரீ பவன்

7. அருள்ஜோதி ~ வினா விடை : ஆசிரியர்

8. மங்கையர் பகுதி ~ குருஜீ


சர்வதேச இந்துமத குருபீடம்

INTERNATIONAL HINDU RELIGIOUS GURUPEEDAM

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம்

90/22, Joseph Dias Lane, Colombo 15,
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலோசனைக் கூட்டத்தில் தலைவர் ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் விளக்கம் கொடுக்கிறார். அருகில் கொச்சிக்கடை சிவன்கோவில் பிரதமகுரு. சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாதக் குருக்கள், கொட்டாஞ்சேனை பிள்ளையார் கோவில் பிரதமகுரு. சிவஸ்ரீ. ந. சோமாஸ்கந்த குருக்கள், மாளிகாவத்தை ஸ்ரீகாந்தக் குருக்கள் ஆகியோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனைக் கூட்டம்




இந்துமத குருபீட ஸ்தாபக தலைவர் ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், கப்பித்தாவத்தை பிரம்மஸ்ரீ. பா. ஷண்முகரெட்ண சர்மா. நவாலியூர். சாமி. விஸ்வநாதக் குருக்கள், கொச்சிக்கடை சிவன்கோவில். சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாதக் குருக்கள், நயினை. சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், கொம்பனித்தெரு. க. சிவபாலக் குருக்கள், சம்மாங்கோடு. ப. பாலசுப்பிரமணியக் குருக்கள், கொழும்பு. சிவஸ்ரீ. சி. மகேஸ்வரக் குருக்கள் உட்பட 176 குருமார்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆண்டொன்று ஆனாலும்
# விண்ணிருந்து வேதவொலி விளக்குகிறார்
# எம் ஆசான்"

நல்லூர் ~ கைலாசப்பிள்ளையார் கோவிலடி

**'நியாய சிரோமணி' 'வேத வித்யா சாகரம்'**

- ஸ்ரீ கணபதீஸ்வர குருகுல அதிபர் -

## அமரர். கி. சுப்பிரமணிய சாஸ்த்திரிகள் அவர்களுக்கு

## சர்வதேச இந்துமத குருபீடத்தின் கவிதாஞ்சலி

## [ஓராண்டு நினைவாஞ்சலி]

தமிழன்னை மனங்குளிர்ந்து தந்ததனிப் பெருஞ்சொத்து
அமிழ்தென்னும், தமிழ்மொழியும் அரியதான வடமொழியும்
அறிந்திருந்த நல்லறிஞர் நாம் போற்றும் நல்லாசான்
பிரிந்திறைவன் பதஞ்சேர்ந்தார் பெரும் பேறுதனைப் பெற்றார்.

ஒப்பரிய தமிழ்நாட்டின் உயர்குடியில் பிறந்த ஐயன்
சுப்ரமண்ய சாஸ்த்திரிகள் தப்பில்லாக் கல்வி கற்றார்
செப்பரிய விருது கொண்டார் சீர்வைமிகு வாக்கில் வல்லோர்
இப்புவியின் வாழ்வை நீத்து இறைவனடி இணைந்து கொண்டார்.

நால் வேதம் நன்கறிந்து ஆகமங்கள் அவைபுரிந்து
நூல் காட்டும் சோதிடத்தை நுணுக்கமாக ஆய்ந்தறிந்து
வேல் போலும் கூர்மைமிகு விளக்கங்கள் கூறித்தம்
கால்பட்ட இடமெல்லாம் கல்விப் பயிர்தனை விதைத்தார்.

"நியாயத்தின் சிரோமணி" நிலைத்ததான விருது பெற்றார்
உபாயங்கள் பலஅறிந்து உரியவகை வாதம் செய்வார்
அபாயத்தின் வழி அறிவு செல்லும்போது அவர் ஈயும்
சகாயத்தை நாடிப் பெற்று சாதித்தோர் பலராய் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த மண்ணாம் தமிழகத்திலிருந்து வந்து இலங்கைத் தீவின்
சிறந்ததான வடபுலத்தில் சிறப்புடனே குடிபுகுந்து
அருந்தவத்தால் தான் அறிந்த அழிவறியாக் கல்வி ஈந்து
பருந்துபட்ட உலகை நாமும் புரிந்துவாழ வழிசமைத்தார்.

வேதத்தை ஆகமத்தை விந்தைமிகு சோதிடத்தை
ஓதிட ஓதுவிக்க உரியதான ஓரிடமாய்
தீ தகற்றும் "கணபதீஸ்வர குருகுலத்தை"க் கண்டெடுத்தார்.
வேத ஞானம் அவரால்ப் பெற்றோர் வெளிநாட்டில் பலர் உள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக் கல்லூரி அவர்களித்த
விண்ணோர் போற்றும் சம்ஸ்கிருத விரிவுரையாளர் பதிவிதனை
எண்ணுகையில் இவர் குருவாய் எமக்கமய நாமும்
பண்ணிய மாதவத்தை என்னவென்று எடுத்துரைப்போம்.

வானவர்கள் வாழ்த்திசைத்து வாரீர் என அழைத்து
"ஞானவானை" வானுலகிற் கழைத்துச் சென்றார் நாம் அறிவோம்
விண்ணிருந்து வேதவொலி விளக்குகிறார் எம் ஆசான்
மண்ணிருந்து மனம்திறந்து மதியுடனே ஏற்றிடுவோம்

**ஓராண்டு நினைவாய்**

**எம் குருநாதர் திருப்பாத கமலங்களுக்கு**

**கவிதாஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்.**

"ஸ்ரீ கணபதீஸ்வர குருகுல மாணவன்" சரவணபவன்

**ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் J. P.**

தலைவர் - இலங்கை பிராம்மண சமாஜம்

தலைவர்

**சர்வதேச இந்துமத குருபீடம்**

90/22, ஜோசப் டயஸ் லேன், புளுமெண்டால் ரோட், கொழும்பு 15.

**Tel & Fax : 527025**

ஆக்கம்

**(ஜெ. திவ்யா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஸ்ரீசந்திர மௌளீஸ்வராய நம
ஸ்ரீ சங்கர பகவத் பாதாசர்ய பரம்பராகத

## ஜகத் குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

அவர்கள்

ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்
1. சாலைதெரு, காஞ்சிபுரம் - 631502

"இலங்கை இந்துமத குருபீடாதிபதி" சிவாகம ஞானி "சிவாச்சார்ய சிம்மம்" "கலாநிதி" அமரர் அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஞாபகார்த்தமாக, சர்வதேச இந்துமத குருபீடம் வெளியிட்டுவரும் **'அருள்ஜோதி'** எனும் ஆன்மீக சஞ்சிகை சமயக்கட்டுரைகள், ஆகம, புராண கட்டுரைகள், வினா - விடை, மாணவர் பகுதி, மங்கையர் பகுதி, செய்திக் கோவை என பல சிறப்பு அம்சங்களுடன் வெளிவருவது அறிந்து சந்தோஷம்

இம்மலரின் ஆசிரியர் "கலாநிதி" ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் அவர்களின் சமயப் பணியைப் பாராட்டி, ஆன்மீக அன்பர்களுக்கு அருளின்பம் ஊட்டும் மலராக **'அருள்ஜோதி'** மலர ஆசீர்வதிக்கிறோம்.

**நாராயணஸ்மிருதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டா கலாநிதி - பிரதிஷ்டா சிரோமணி

# நவாலியூர். பிரம்மஶ்ரீ. சாமி. விஸ்வநாதக் குருக்கள்

## - வழங்கிய ஆசிச்செய்தி -

இலங்கைத் திருநாட்டில் தலைசிறந்த சிவாச்சாரியராக வேத - சிவாகம, புராண, இதிகாஸ, ஜோதிட, மாந்திரீக, வைத்தியம் என பலதுறைகளிலும் பாண்டித்யம் பெற்று இலங்கை இந்துமத குருபீடாதிபதியாக, சிவாகம ஞானியாக அந்தண குலத்தவர்க்கு ஏற்படும் சந்தேகங்களை ஆதார பூர்வமாக உடனுக்குடன் தெளிவு பெறவைத்து அமரரான அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஞாபகார்த்தமாக.

அன்னாரின் புதல்வர்களில் ஒருவரான " ஸ்ரீ சபரிமலை சாஸ்தா பீடாதிபதி " ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் **'அருள்ஜோதி'** எனும் ஆன்மீக மலரை வெளியிட்டு வருவது பாராட்டுக்குரியது.

எமது பிராம்மண சமூகத்திற்கு ஏற்படும் துன்பங்கள், சங்கடங்களுக்கு துணிந்து குரல் கொடுக்கக்கூடிய, குரல் கொடுத்து நடவடிக்கை எடுத்துவரும் எங்கள் அன்பு தாஸனான ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள்

எமது குருமார்களுக்கு பாதுகாப்பு படையினரால் ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்து மேன்மைதங்கிய ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களை சந்திப்பதற்கு பத்துக் குருமார்களுடன் சென்றபோது ஜனாதிபதி அவர்கள் அவசர வேலையாக வெளியே சென்றுள்ளார்கள். எனவே என்னை உங்களுடன் பேசுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார் என்று ஜனாதிபதியின் செயலாளர் கூறியபோது நாம் எமது குருமார்களின் பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதி அவர்களுடன்தான் பேச விரும்புகிறோம் என்று துணிந்து கூறியதன் பயனாக அடுத்தவாரமே ஜனாதிபதி அவர்கள் அலரிமாளிகைக்கு பத்து குருமார்களையும் அழைத்து 45 நிமிடங்கள் உரையாடினார். இது எமது பிராம்மண சமூகத்திற்கே கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

இந்த வெற்றிக்குரியவர் உண்மையில் ஐயப்பதாஸக் குருக்கள்தான் என்றால் எவரும் மறுக்க முடியாது.

எமது இலங்கை பிராம்மண சமாஜத்தின் தலைவராக, சர்வதேச இந்துமத குருபீடத்தின் ஸ்தாபக தலைவராக, இந்துசமய கலாச்சார முத்தமிழ்ச் சங்கத்தின் தலைவராக, அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடத்தின் பீடாதிபதியாக பல, சமயப்பணி, சமூகப்பணி, கலைப்பணி ஆற்றிவரும் கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார். J. P. அவர்களின் பணி மென்மேலும் சிறக்க ஆசீர்வதிக்கிறேன்.

அவர்கள் வெளியிடும் **'அருள்ஜோதி'** எனும் ஆன்மீக மலர் ஆஸ்தீகப் பெருமக்களுக்கு பயனுடையதாக அமைய இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.


சுபம்

சுவிசுத்தாராமறோட்
வெள்ளவத்தை, கொழும்பு.
Tel : 585063

**பிரம்மஶ்ரீ. சாமி. விஸ்வநாதக் குருக்கள்**
(நவாலியூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

ஸர்வஸாதகமணி, ஸர்வ சாதக திலகம்

**சிவஸ்ரீ. தே. சு. முத்துக்குமாரசுவாமி சிவாச்சாரியார்**

(தென்னிந்திய அமைப்பாளர், சர்வதேச இந்துமத குருபீடம்)

## அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி

புண்ணியபூமியான லங்காபுரியில் ஜாதி மத இன வேறுபாடின்றி எல்லா இனங்களிலும் ஹ்ருதயத்திலும் ஆண்டவன் இருக்கின்றான் என்கிற பெருநோக்குடன் இலங்கை இந்துமத குருபீடாதிபதி, சிவாகமஞானி, "சிவாச்சார்ய சிம்மம" அருள்ஜோதி **ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்** அவர்களின் ஞாபகார்த்தமாக அருள்ஜோதி என்னும் ஆன்மீக இதழ் ஐயங்களைப் போக்கும் விதத்தில் சபரிமலை சாஸ்தாபீடாதிபதி கலாநிதி **ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார்** நடாத்திவரும் ஆன்மீகமலர் மூலம் விஷயங்களைப் படித்து நல்லுணர்வை பெறுமாறும் மேலும் இங்கு மட்டுமல்லாமல் சமய குரவர்கள் பாடியது போல் "தாய் நாடு முதல் வெளிநாடுகள் உட்பட" **முன்னைபழம் பொருட்கும் முன்னைபழம் பொருளே பின்னைப்புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே** என்கின்ற தேனினும் இனிய திருவாசகத்தின்படி "அருள்ஜோதி" பத்திரிகை எல்லோராலும் படித்து நன்மையை அடைய வேண்டுகிறேன்.

மேலும் அம்மஹானின் சடங்குகளைச் செய்விக்க ஆரம்பமுதல் வருஷாப்பதிகம் வரை செய்விக்க எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகவும் கருதுகிறேன். அருள்ஜோதி ஆன்மீக மாத இதழ் அடியார்களின் இருளைப் போக்கி அருளைப் பெற ஆடல் அரசனை வணங்கி ஆசீர்வதிக்கின்றேன்.

ஸர்வஸாதகமணி
**தே. சு. முத்துக்குமாரஸ்வாமி சிவாச்சாரியார்**
14, கற்பகவிநாயகர் கோவில் தெரு,
கிழக்கு தாம்பரம்
சென்னை - 59



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பே ஆலயம்

**கலாநிதி சாம்பசிவ ஷண்முகநாத சிவாச்சாரியார்**
(சர்வதேச இந்துமத குருபீடம் - லண்டன் அமைப்பாளர்)

"உள்ளத்தினுள்ளானடி
அவனை நாம் உணர வேண்டுமடி"

~ கவிமணி தேசிய விநாயகம் ~

வாழ்க்கையை அனுபவிப்பதற்கும் சரி, வேதங்களிலுள்ள தர்மங்களைச் செய்வதற்கும் சரி, இந்த உடம்பு அத்யாவசியம். ஆகவே, இந்த உடம்பு பற்றி நாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். உடம்பு பற்றிய சாஸ்திரம் (ஃபிஸியாலஜி) இருப்பது போல இந்த உடம்பு எப்படிச் செயல்படுகிறது என்பதற்கும் ஒரு சாஸ்திரம் இருக்கிறது. இதை நன்கு புரிந்து கொண்டால்தான் தத்துவ விஷயங்கள், யோக விஷயங்கள், வேதாந்த விஷயங்கள் எல்லாம் புரியும்.

இம் மனித உடம்பு எப்படிப்பட்டது? இது பற்றி நூற்றாண்டுக் காலக் கணக்காக அபிப்பிராயம் மாறி மாறி வந்திருக்கிறது. "சகல ஜீவராசிகளிலும் சிறந்தவன் நானே" என்று மனிதன் பெருமை பேசியிருக்கிறான். பின்னர் தன்னையும் இதர ஜீவன்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, "ஓஹோ நான் குரங்கிலிருந்து வந்தவனா?" என்று சோர்வடைந்திருக்கிறான். அதன் பின் நவீன விஞ்ஞான சாஸ்திரங்கள் வளர்ந்தன. பற்பல ஆராய்ச்சிக்குப் பின், இயந்திரங்கள் தோன்றின. 'இவ்வளவுதானா? என் உடம்பும் இந்த மாதிரி இயந்திரங்களில் ஒன்று தான்" என அவன் தீர்மானித்து விட்டான்.

பாரக்கப்போனால் மனிதன் ஒரு இயந்திரமே. எஞ்சின் வேலை செய்ய எண்ணெய், நிலக்கரி முதலியவை அவசியம். மனிதனுக்கு உணவு தேவை. மனிதன் வயிறு ஒரு அடுப்பைப் போலவே வேலை செய்கிறது. அடுப்பிலே ஒரு அவுன்ஸ் சர்க்கரை போய்ச் சேர்ந்தால் எவ்வளவு உஷ்ணம் ஏற்படுமோ, அவ்வளவு அது வயிற்றில்போய்ச் சேர்ந்தாலும் ஏற்படுகிறது. பலவிதங்களில் இந்த உடலின் அமைப்பு இயந்திரம் போலவே அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி! மனிதன் என்று சொல்பவனிடம் என்னவெல்லாம் உள்ளது? (1) உடல் (2) மனம், (3) பல உணர்ச்சிகள் அறியும் கருவிகள். (ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள்) (4) "நான்" என்னும் அகங்காரம். உயிர் உடலில் இருக்கும்போது இத்தனையும் சேர்ந்து சீவனாகிறான். உயிர் உடலை விட்டு அகலும் போதுஅந்த சீவனே சவமாகி விடுகிறது.

இந்த ஸ்தூல சரீரத்தில் 72,000 நாடிகள் இருக்கின்றன. இந்த உயிர் இருப்பது என்பது இந்த உடலில் ஆத்மா இருக்கிறவரைதான். இந்த ஆத்மா குடிகொண்டுள்ள இந்த உடலே உடம்பு என்னும் இந்த ஆலயம்.

ஆலயம் என்றால் தோற்றம், ஸ்திதி, லயம் மூன்றும் நிறைந்த இடம். இது கோயில் எனவும் கூறப்படும். (கோ-இறைவன். இல்-அருள் செய்யும் இடம்,)ஆலயத்தின் ஹிருதயமாக கர்ப்பக்கிரஹத்தில் இறைவன் எப்படி உறைகிறானோ அதுபோல இந்த உடம்பின் இருதயத்திலும் "ஆத்மா" என்ற இறைவன் வசிக்கிறான். ஆலயம் சரீரத்தை விரித்துக் கூறுவதால் சரீர பிரஸ்தாரம் என்றும், இருதயத்தை விரித்துக் கூறுவதால் இருதய பிரஸ்தாரம் என இரு வகைப்படும்.

இறைவன் இல்லாத இடம் எது? அங்கிங்கெனாதபடி எங்கும் இருக்கிறார். எல்லா உயிர்களிலும், எல்லாப் பொருள்களிலும் அவர் வியாபித்திருக்கிறார். இக்கருத்தை வெகு அழகாகவும், உருக்கமாகவும் "நற்பதத்தார் நற்பதமே" என்கிற பாசுரத்தில்

**"நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந்தன்னுள்**
**புலால் உடம்பே புகுந்த கற்பகமே**
**உன்னைநான் விடுவேனல்லன்"**

என்கிறார் மாணிக்கவாசகர்

மாமிசத்தினால் ஏற்பட்ட இவ்வுடலில் எப்போதும் சஞ்சலமான மனத்தில் புகுந்து நிலைத்துக் கடவுள் இருக்கிறார் என்ற தத்துவத்தை இப்பாடல் விளக்குகிறது.

## உடல் பெருங் கோயில்

இதையே திருமூலர் "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பே ஆலயம்" என்று குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் கர்ப்பக் கிரஹம், அர்த்த மண்டபம், மஹாமண்டபம், ஸ்நான மண்டபம், அலங்கார மண்டபம் முதலிய மண்டபங்களும் உள்ளன இந்த ஆறும் உடம்பிலுள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம் மணிபூரகம், அனாகதம் விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறாதாரங்களை உணர்த்துகின்றன.

இந்த உடம்பு ஆலயத்தில் பகவான் குடிகொண்டுள்ளது. இருதயமாகிய கர்ப்பக் கிருஹத்தில்தான் இருக்கிறார் என்பதை, "ஹிருதயம் தத்விஜா" "நீயாத் விஸ்வஸ்யாயதனம் மஹத்" என்று புருஷஸூக்தம் கூறுகிறது. (அதாவது "இருதயத்தை எங்கும் வியாபித்துள்ள பெருமானின் இருப்பிடமாக அறிந்து கொள்" என்று அர்த்தம்) தைத்ரீய ஆரண்யஹம் முதல் பிரகரணத்தில்,

**அஷ்டா சக்ரா நவத்வாரா**
**தேவாநாம் பூ ரயோத்யா**
**தஸ்யாகும் ஹிரண்மய: கோச: ஸ்வர்கோ**
**லோகோ ஜ்யோதிஷாவ்ருத:**
**யோவைதாம் பிரம்ஹணோ வேத**
**அம்ருதேநா வ்ருதாம் புரீம்**
**தஸ்மை பிரஹ்மச பிரஹ்மாச ஆயு :**
**கீர்த்திம் பிரஜாம் தது:**

என்று சொல்கிறது.

(எண்வகைத் தோல்களும், ஒன்பது துவாரங்கள் கொண்ட இந்த சரீரத்தில் பரமாத்மா வசிப்பதற்கு தங்க மயமான பட்டணமாக அமைந்தது மார்பகம், அதை பகவானின் திருக்கோயிலாக எண்ணி பகவானை தியானிப்பவர்களுக்கு பரம்பிரும்மமும் பிரும்மாவும் ஆயுள், கீர்த்தி, சந்ததி, சம்பத்து முதலியவைகளை அளிக்கிறார்.)

இறைவன் கட்டை விரல் பருமன் அளவுக்கு ஆத்மா ரூபமாக, இருக்கிறான் என்று கூறப்படுகிறது.

## அந்தர்யாமி தத்துவம்

பிருஹதாரண்ய உபநிஷத்திலுள்ள, அந்தர்யாமி பிராம்ஹணத்தில் இத்தத்துவம் நன்றாக விளக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீருண்ட கருமேகத்தில் மின்னல் தோன்றுவது போல ஹிருதயத்தில் தோன்றுகிற பரமாத்மாவை நாம் உபாசிக்க வேண்டும் என்கிறது புருஷ ஸூக்தம்.

எல்லோர் ஹிருதயத்திலும் பகவான் இருக்கிறாரே, அப்படியிருக்க ஞானமும், பக்தியும் நிறைந்த பெரியோர்களின் ஹிருதயத்தில் கடவுள் நிலைத்திருக்கிறார் என்று திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

**" அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று ஞானப்**
**புகலுடையார் தம் உள்ளம் புண்டகரித்துக்**
**குள்ளிருக்கும் புராணர் கோயில் "**

சம்பந்தர் நிலைத்து' என்கிற வார்த்தையை உபயோகித்திருக்கிறார். அந்த இறைவன் தன் இருப்பிடத்திலுள்ள அசுத்தங்களைக் கண்டு வெளியேறி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து வெளிப்படுகிறது, “இந்த உடம்பு நாற்றமெடுத்த பொருள்தானே என்று அசிரத்தையாக இருந்தேன். ஆனால் இறைவனே அதில் குடிகொண்டதை உணர்ந்தபின் இந்த உடம்பை ஓம்பலுற்றேன்” என்கிறார் திருமூலர்.

பொய்கையாழ்வாரும் இந்த அந்தர்யாமி தத்துவத்தை வெகு அழகாக உணர்த்துகிறார்.

**உளன் கண்டாய் நன்னெஞ்சே உத்தம னென்னும்**
**உளன் கண்டாய் உள்ளுவாருள்ளத்து துளன் கண்டாய்**
**வெள்ளத்தினுள்ளானும் வேங்கடத்து மேயானும்**
**உள்ளத்திலுள்ளான் னென்றோர்**

பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் பெருமானும், திருவேங்கட மலையில் கோயில் கொண்டுள்ள வெங்கேடசப் பெருமாளும் உள்ளத்திலுள்ளவரே தான். நன்றாக அறிந்து கொள்” என்றார்.

இந்த இருதய கோயிலுக்கு முகம் வாசல் போல உள்ளது. ஒரு வீட்டின் வாசலை நன்றாகப் பெருக்கி, மெழுகி கோலம் போட்டால் எவ்வளவு லட்சுமிகரமாக இருக்கும். அது போலவே பாழ் நெற்றியுடன் இல்லாமல் விபூதியோ, நாமமே அல்லது குங்குமமோ இட்டுக்கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளி தேவியின் ரூப பேதங்கள்

"மறைவண்ணர்" சிவஸ்ரீ து. மணிவண்ண சிவாச்சாரியார்.
(ஸ்ரீ இராஜமாரி அம்பாள் தேவஸ்தானம் - ஜோகூர்பாரு, மலேசியா)

தெய்வ வழிபாட்டிலே சக்தி வழிபாடு என்பது நம் நாட்டில் மிக, மிகத் தொன்மையானது என்றும், அதனில் ஓர் முக்கியப் பகுதி காளி வழிபாடு என்பதற்கும் நம் இந்து மதத்தில் உள்ள இதிகாச, புராணங்கள் பல சான்றுகளைத் தருகின்றன.

காளியின் ரூப பேதங்களில்தான் எத்தனை வகை? காளியைப் பற்றி சிற்ப, ஆகம நூல்கள் கூறும்பொழுது, அவள் இரண்டு கைக் காளி, நான்கு கைக் காளி, எட்டுக் கைக் காளி, பதினாறு கைக் காளி, பதினெட்டு கைக் காளி என்று பல வடிவங்களில் காட்சியளிப்பதாகவும் வர்ணிக்கின்றன.

## இரண்டு கைக் காளி

**ரக்தவர்ணம் த்விநேத்ரம் ச த்விபாதத்விபுஜான்விதம்**
**கபாலம் சூலஹஸ்தம் ச ரௌத்ரீ மகரதாரிணீ**

சிவந்த நிறம், இரு கண்கள், இரு கைகள், இரு பாதங்கள் கொண்டவள். கபாலம், சூலம் இவைகளை கைகளில் தாங்கிக் கொண்டு பயங்கரமாகக் காட்சியளிப்பவள்.

**ஆதஸீபுஷ்ப ஸங்காசம் த்விநேத்ரம் தவிபுஜான் விதம்**
**ஜடாமகுடினீ காளீ ஹலாமுஸல தாரிணீ**

வாகைப்பூ நிறம் கொண்டவள். ஜடா மகுடம் தரித்தவள். இரண்டு கைகளிலும் கலப்பை, உலக்கை என்ற ஆயுதங்களைப் பிடித்திருப்பவள்.

**(சில்ப ரத்னத்தில்)**

**அதிரௌத்ரா மஹாதம்ஷ்ட்ரா ப்ருகுடீகுடிலேக்ஷணா**
**விவர்த்த நயனா சூரா தீர்க்ககோணா மதான்விதா**
**ஸ்நிக்த கம்பீர நிர்க்கோஷா நீலஜீமூத ஸந்நிபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரகுடீ கூட ஸந்தீப்தா மஹாவதன பீஷணா
தம்ஷ்ட்ராஷ்ட கோபதாம்ராக்ஷீ ரக்த தீர்க்க சிரோருஹா
த்ரிசூல வ்யக்ர தோர்தண்ட நரகீசக வாதினீ
அதிரக்தாம்பரா தேவீ ரக்தமாம்ஸா சவப்ரியா
சிரோமாலா விசித்ராங்கீ சின்வந்தீ சோனிதாஸவம்
ந்ருத்யந்தீ ச ஹஸந்தீ ச சிசாசகண ஸேவிதா
பிசாசஸ்கந்த மாருஹ்ய ப்ரமந்தீ வஸுதாதலம்
இத்யம்பூதாம் பத்ரகாளீம் மாத்ருபி : பரிவாரிதாம்

இவள் மிகவும் பயங்கரமானவள். பெரிய தெத்திப் பல்லையுடையவள். புருவத்தை உயர்த்திய நீண்ட கண்களைக் கொண்டவள். நீண்ட மூக்குடையவள். மதம் கொண்டவளானாலும் அன்புடன் கூடிய கம்பீரமான ஒளியையுடையவள். கருமேக நிறத்தினள். சிவந்த நீண்ட கூந்தலையுடையவள். இரு கை களிலும் திரிசூலம் ஏந்தியவள். சிவந்த ஆடைகளை அணிந்து முண்டமாலை யணிந்தவள். ஆடல் பாடல்களுடன் விளங்குபவள். பைசாசங்களால் தொழப்பட்டவள். பைசாசத்தின் தோள் மீது ஏறிக் கொண்டு உலகை வலம் வருபவள். சப்தமாதர்களால் சூழப்பட்டுள்ள இந்த பத்ரகாளியை வணங்குவோமாக.

## <u>நான்கு கைக் காளி</u> (நாரதீய ஸம்ஹிதா)

இவளை நான்கு கைகள் உடையவளாக துர்க்கா தேவியைப் போன்று அமைக்க வேண்டும். கரிய நிறமும், சிறிய இடையும் கொண்ட இவள் பட்டாடைகளை அணிந்திருப்பாள். அகழிகளைக் காப்பவள். வாசுதேவனைப் போன்றே இவளும் ஆயுதங்கள் தாங்கியிருப்பவள். கமல மலரில் இருப்பவள். மஹிஷத்தின் தலையில் நின்ற கோலத்திலும் காணலாம்.

ததோ துர்க்காம் பகவதீம் க்ருஷ்ணாபாம் துர்க்கரக்ஷிணீம்
சதுர்புஜாம் ததா குர்யாத் க்ஷாம மத்யாமலங்ருதாம்
அஸ்யாமாயுத வின்யாஸம் வாஸுதேவே யாதா ததா
பீத கௌசேய வஸனாம் பத்மமத்யே ஸ்திதாம் சுபாம்
அதவா மஹிஷே மூர்த்னி பீடேவா ஸ்தராணான்விதே

என்று நாரதீய ஸம்ஹிதா என்ற நூல் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்யாயேத் காளி மஹாதேவீம் ரத்ன ஸிம்ஹாஸனஸ்திதாம்
பத்மாஸன ஸமாஸீனாம் ரக்த வஸ்த்ராம் சதுர்புஜாம்
சூலம் டமருகம் சைவ கபாலம் பாசதாரிணீம்
ஏவம் த்யாயேத்து ருத்ராங்கீம் ஸர்வகாம ப்ரஸாதினீம்

செந்நிற ஆடைகளணிந்து, தனது நான்கு கரங்களிலும் சூலம், டமருகம், கபாலம், பாசம் ஆகியவைகளைப் பிடித்துக் கொண்டு, ரத்னங்களால் இழைக்கப்பட்ட ஸிம்மாசனத்தில், பத்மாஸனத்தின் மீது அமர்ந்து, பயங்கரத் தோற்றத்துடனும், விரும்பியதனைத்தையும் அருள்பவளாகவும் உள்ள காளிகா தேவியை தியானம் செய்ய வேண்டும்.

ஏகவஸ்த்ராம் த்ரிநயனாம் ஊர்த்வகேச ஸமன்விதாம்
ச்யாமவர்ண ஸமாயுக்தம் சதுர் கோதண்ட மண்டிதம்
ப்ரஸன்னவதனாம் தேவீம் துகூலவஸனான் விதாம்
சூலம் டமருகம் சைவ கபாலம் பாசமேவச
பிப்ரதீம் புல்லநயனாம் நானாபரண பூஷிதாம்
ஸர்வாலயவஸம் யுக்தம்ஸர்வாவயவ வஸுந்தரீம்
சயனம் வாமபாதம் ச லம்பிதம் ஸவ்யபாதகம்
திவ்ய ஸிம்ஹாஸனாஸீனாம் திவ்ய மால்யாதி பூஷிதாம்

கரிய நிறமும், அருள் பொழியும் முகமும், முக்கண்களும், மேல் நோக்கிய கூந்தலும் கொண்டவள். வெண் பட்டாடை அணிந்து சூலம், டமருகம், கபாலம், பாசம் ஆகியவைகளை தனது நான்கு கரங்களிலும் தரித்திருப்பவள். மலர்ந்த கண்கள் உடையவள், பல வகையான அணிகலன்கள் பூண்டவள். எல்லா அங்கங்களும் எழிலுற விளங்குபவள். இடக் காலை மடித்து, வலக்காலை தொங்கவிட்ட நிலையில் அமர்ந்திருப்பவள். உயர்ரக ஸிம்மாசனத்தில் அமர்ந்து திவ்ய மாலைகளை அணிந்தவள்.

## ஆறு கைக் காளி [வைகானஸ த்யான முக்தாவலி]

ஷட்பிச்சூல கபால பாச டமரு ப்ராஸான்ஸ கேடான் கரை :
விப்ராணா த்ருதபால மௌலிருசிர ப்ரௌடோத்தராஸங்கிகா
ரௌத்ரீ நித்ய மவக்ரஹாஸனகதா பந்தூக ரக்தாக்ருதி
ச்ரிலஷ்யத்பீனகுசாத்யுதங்முகயுதா காளீ மபீஜா வது

ஆறு கைகளிலும் சூலம், கபாலம், பாசம், டமருகம், ஈட்டி, கேடயம் ஆகியவைகளைப் பிடித்திருப்பவள். சிறிய கீரீடத்தால் பிரகாசிக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாடையை உடையவள். பயங்கரத் தோற்றம் கொண்டவள். அவக்ரஹம் என்ற ஆசனத்தில் அமர்ந்திருப்பவள் : செம்பருத்திப் பூப்போன்ற நிறமுடையவள். பருத்த ஸ்தனங்களை யுடையவள். வடக்கு நோக்கிய முகத்தையுடையவள்."ம" என்ற அக்ஷரத்தை பீஜமாக உடையவள் இந்தக் காளி நம்மைக் காப்பாற்றட்டும்.

வைகானஸ த்யான முக்தாவலி - ஏழாவதுபதம் - ஐந்தாவது ஆவரணத்தில் தெற்குப் பக்கத்தில் ஸப்த மாதர்களை மேற்கு நோக்கிய வகையிலே அமைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஸப்தமாதர்களில் இளையவள் காளியே, ஸப்தமாதர்கள் ப்ரஹ்மாணி, சரித்பிரியா, வைசாகினி, விச்வாகர்பா வாராஹி, இந்திராணி, காளி என்றும் மேற்படி நூல் கூறுகின்றது.

## எட்டு கைக் காளி

**அஷ்ட பாஹுர் மஹாகாயா காலமேக ஸமப்ரபா**
**சங்க சக்ர கதா கும்ப முஸலாங்குச பாசயுக்**
**வஜ்ரம் கரே பிப்ரதீ ஸா மஹாகாளீ முதே (அ) ஸ்து ந :**

கரும் முகில் போன்ற பெருத்த உடலையுடையவள். தனது எட்டுக் கரங்களிலும் சங்கு, சக்ரம்,கதை, கும்பம், உலக்கை, அங்குசம், பாசம், வஜ்ரம் ஆகிய ஆயுதங்களைத் தரித்தவள். இத்தகைய மஹா காளி நமக்கு அருள் புரிவாளாக.

**ச்யாமாபாம் ரக்தவஸ்த்ராம் ஜ்வலன சிகயுதாம் அஷ்ட ஹஸ்தாம் த்ரி நேத்ராம்**
**சூலம் வேதால கட்க அபயவரகரம் வாமஹஸ்தே கபாலம்**
**அன்யே கண்டாந்து கேடம் ஹலஹலஸஹிதாம் ரௌத்ர பாவாம் த்ரிநேத்ராம்**
**சாமுண்டீம் பீமரூபாம் புவனபயகரீம் பத்ரகாளீம் நமாமி //**

ஒரு முகமும், மூன்று கண்களும், எட்டுக் கரங்களும் உடையவள். சூலம், வேதாளம், வாள், அபயம், வரதம், கபாலம், மணி, கேடயம் ஆகியவைகளை எண் கரங்களிலும் தாங்கியவள்: கரிய நிறம் கொண்டவள். சிவப்பு ஆடையணிந்தவள். ஜ்வாலா கேசம் கொண்டவள். பயங்கர உருவமானவள். இத்தகைய சாமுண்டி எனும் பத்ரகாளியை நான் வணங்குகிறேன்.

மூலாதார ஸஹஸ்ரார க்ரந்திகளை போதிக்கக்கூடிய யோக சக்தியே சாமுண்டி என்பது தத்துவ விளக்கமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்துக் கைக் காளி

**கட்க சக்ர கதேஷ° பாச பரிதான் சூலம் ப்ருசுண்டீம் சிர :**
**சங்க ஸந்ததீ கரை : த்ரிநயனாம் ஸர்வாங்க பூஷாவ்ருதாம் -**
**நீலாச்மத்யதி மாஸ்யபாத தசகாம் ஸேவே மஹா காளிகாம்**
**யாமஸ்தௌத் ஸ்வபிதே ஹரௌ கமலஜோ ஹந்தும் மதும் கைடபம் //**

இந்த பத்துக்கை காளியை 'ஸ்ரீ தத்வ நிதி' புதுமையாகக் கூறுகின்றது.

தன்னுடைய பத்துக் கரங்களிலும் இவள் வாள், சக்ரம், கதை, அம்பு, பாசம், இரும்புத்தடி, சூலம், ப்ருசுண்டி, தலை, சங்கு ஆகியவைகளைத் தரித்து விளங்குபவள். முக்கண்கள் உடையவள். எல்லா அங்கங்களிலும் அணிகலன்கள் பூண்டவள். இந்திர நீலக் கல்லின் வர்ணத்தை யொத்த நிறம் கொண்டவள். 10 முகமும் பத்து கால்களும் உடையவள். இந்த மஹா காளியை நாம் வணங்குவோமாக.

விஷ்ணு யோக நித்திரையிலிருந்தபோது, மது கைடபர்களை அழிப்பதற்காக ப்ரம்மாவால் ப்ரார்த்திக்கப்பட்ட காளிகா தேவியே இவள்.

## பதினாறு கைக் காளி

**நானாபா ஹேமவஸ்த்ரா நவருதிவஸா மாம்ஸநிர் பின்ன வக்த்ரா**
**சூலம் குந்தம் ரதாங்கம், பணி முஸல கதாம் தோமரம் பத்ருஸம் ச /**
**பாசம் சக்திஞ்ச சங்கம் த்வஜஹல தஹனான் வஜ்ரகேடம் கராக்ரை :**
**பிப்ராணா பீமவேஷா விஜயது புவனே விச்ருதா பத்ரகாளி //**

பலவர்ணத்தவள், பொன்நிற ஆடை அணிந்தவள் புதிய ரத்தம், கொழுப்பு இவைகளை உடையவள். மாமிஸத்தில் துளைக்கப்பட்ட முகத்தை உடையவள். சூலம், ஈட்டி, சக்ரம், பாம்பு, உலக்கை, கதை, பாசம், சக்தி சங்கு, த்வஜம், கலப்பை, அக்னி, வஜ்ரம், கேடயம் ஆகிய படைகளை - தனது பதினாறு கரங்களிலும் தாங்கியவள். பயங்கர உருவம் கொண்டவள். இந்த பத்ரகாளி ஜெயமுடன் வாழ்பவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினெட்டு கைக் காளி

அஷ்டா தசபுஜா கார்யா பத்ரகாளி மநோஹரா:
ஆலீடஸ்தானஸம்ஸ்தானா சதுஸ்ஸிம்ஹரதே ஸ்திதா
அக்ஷமாலாம் த்ரிசூலம் ச கங்க சர்ம ச ஸர்வதா
பாணை சாபௌ ச கர்த்வ்யே சங்க பத்மே ததைவ ச
ஸ்ருக் ஸ்ருவௌ ச ததா கார்யௌ ததா திவ்யம் கமண்டலம்
தண்டசக்தி ச கர்தவ்யே க்ருஷ்ணாஜின ஹ°தாசநௌ
ஹஸ்தாநாம் பத்ரகாள்யாஸ்து பவேச்சாந்திகரோ (அபயதோ) வர :
ஏவம் கார்யா மஹா பாகா ரத்னபாத்ரதரா பவேத்

ஆலீட ஸ்தானத்தில் இருக்கும் பத்ரகாளியானவள், நான்கு சிங்கங்கள் பூட்டப்பட்ட ரதத்தில் அமர்ந்தவள். 18 கைகளைக் கொண்டவள். அவைகளில் அக்ஷமாலை, த்ரிசூலம், வாள், கேடயம், வில், அம்பு, சங்கு, பத்மம், ஸ்ருக், ஸ்ருவம் கமண்டலம், தண்டம், சக்தி, மான் தோல், அக்னி, அபயம், வரதம், ரத்னபாத்ரம் இவைகளைப் பிடித்திருப்பள்.

மேலும் "வைகானஸ த்யான முக்தாவலி" என்ற நூல் மூன்றாவது பிரகரத்தில் கிழக்கு வாயிலில் ஐசானியத்தில் மஹா காளியை அமைக்க வேண்டும் என்று கூறுகிறது.

சைத்ரார்த்ராஜநிதா லஸட்டமருகா பாதம் ப்ரஸார்ய ஸ்திதா
பைசாச த்வஜவாஹனா டமருகத்வானா ட்டஹாஸான்விதா /
பூபங்கீவிகடா கபால குணை ப்ருத்தஸ்தா வகுஞ்சத்கசா
தம்ஷ்டிண்யார்த்ரகசூல கோக்ரனயனா ச்யாமாம்பரா ரக்ஷது //

சித்திரை மாதம் ஆருத்ரா நட்சத்திரத்தில் பிறந்தவள். இடது காலை மடக்கி வலது காலில் நின்ற கோலத்தில் உடுக்கைப் பிடித்தவள். உடுக்கையின் ஒலியையுடையவள். பைசாசங்களை த்வஜமாகவும், வாஹனமாகவும் உடையவள். அட்டஹாஸமான சிரிப்புடன் கூடியவள். புருவத்தை நெரித்தலால் பயங்கர உருக்கொண்டவள். கபாலம், பாசம் இவைகளை இரு கைகளில் பிடித்தவள். சுருண்ட செம்பட்டையான கேசம் உள்ளவள். தெத்திப் பல் உடையவள். ரத்தத்தால் நனைக்கப்பட்ட சூலத்தைப் பிடித்தவள். உக்ரமான கண்களைக் கொண்டவள். கரிய ஆடையணிந்தவள். இந்தக் காளி நம்மைக் காப்பாற்றட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம் பீஜ காளி

**கம் பீஜா ருதிராம்பரா கனருசி ரக்தோக்ரனேத் ரோஜ்ஜ்வலா**
**ப்ரூபங்கீ விக்ருதானனோர்த்வசச ப்ருஹஷ்ட்ராஹி பூஷாயுதா**
**காளீ சூல கபாலினீ ஹ°தவஹத்வானா பிசாச த்வஜா**
**வஹ்நிஜ்வால கசைர்யுதோக்ர கலாபாருடா பரண்யுத்பவா //**

'கம்' என் அக்ஷரத்தை பீஜமாகக் கொண்டவள். செந்நிற ஆடையணிந்து சிவந்த உக்ரமான கண்களையுடையவள். புருவத்தை உயர்த்துவதால் பயங்கரமான தோற்றம் கொண்டவள். மேலே உள்ள சந்திரனைப் போன்றவள் தெத்திப் பல்லையுடையவள். பாம்புகளை அணிகலனாக அணிந்தவள். சூலம், கபாலத்தை கைகளில் ஏந்தியவள். அக்னியின் ஒளியைக் கொண்டவள். ஜ்வாலா கேசம் உடையவள். உக்ரமான யானையின் மீது அமர்ந்துள்ள இவள் பரணி நட்சத்திரத்தில் தோன்றிவள்.

இந்த தாத்பர்யத்தை பிருகுவும், மரீசியும் அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள். மேலும் "ப்ரஞ்ச ஸார ஸங்க்ரஹம்" எனும் நூல்

**யா பஸ்மோத்தூலிதாங்கீ புஜகபரிவ்ருதா வ்யாக்ர சர்மோத்தரீயா**
**நிர்மாம்ஸி மாம்ஸ பஹீ விகத நரசிரோபந்தமால கராலீ**
**சாமுண்டா ரக்தகர்ணீ சவசயனிரதா பத்த முண்ட ப்ரசண்டா**
**நிச்சங்கா கோடராக்ஷீ பயதுரிதஹரீ பத்ரகாளி ப்ரஸன்னா //**

திருநீரு அணிந்த திருமேனியாள். அரவங்களால் சூழப்பட்டவள். புலித்தோலை மேலாடையாக அணிந்தவள். மாமிஸம் அற்றவள்: முண்ட மாலையணிந்து பயங்கரியாக காணப்படுவாள். சாமுண்டா எனப் பெயர் கொண்டவள். சிவந்த காதுகளையுடையவள். பிரேதத்தின் மேல் படுக்க விருப்பம் கொண்டவள். உள்ளடங்கிய கண்களினால் பயத்தையும், பாவத்தையும் போக்குபவள். இந்த பத்ரகாளி நமக்கு அருள் புரியட்டும்.

## சமஷ்டி காளி

**மாதர்மே மதுகைபாக்னி மஹிஷப்ராணா ப்ராணாப ஹாரோத்யமே**
**ஹேலாநிர்மித தூம்ரலோசன வதே ஹே சண்டமுண்டார்த்தினி**
**நிச்சேஷீக்ருத ரக்தபீஜ தநுஜே நித்யே நிசும்பா பஹே**
**சும்பத்வம்ஸினி ஸம்ஹராசு துரிதம் துர்க்கே நமஸ்தேம்பிகே //**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ச்லோகம், துர்க்கை, சாமுண்டி, மகிஷமர்த்தனி அனைவரும் அம்பிகை ஒருத்தியே என்பதை தெளிவுபடுத்துகிறது.

மதுகைடபர்களை யழித்தவளே! மஹிஷனை வதம் செய்தவளே, விளையாட்டாகவே தூம்ரலோசனை ஸம்ஹாரம் செய்தவளே, சண்டமுண்டர்களை ஒழிந்தவளே, ரக்த பீஜனை மிச்சமின்றி ஒழித்தவளே, நிசும்பனை ஸம்ஹரித்தவளே, சும்பனைக் கொன்றவளே தாயாகிய துர்க்காதேவியே! பாவங்களிலிருந்து எங்களைக் காப்பாயாக.

## நாமரூப பேதங்கள்

நாம பேதமில்லாத தெய்வத்துக்கு, ரூப பேதம் என்று ஒன்று இருக்க முடியுமா? முடியாது. இருந்தாலும் மனிதன் 'தான் அதுவாக ஆகவேண்டும்' என்று நினைக்கின்றபொழுது, அவன் ஏறும் முதல் படிதான் ஸகுண உபாஸனை என்பது. அவ்வழிபாட்டில் நாம, ரூப பேதங்களை தெய்வத்தின் மேல் ஏற்றி புறக்கண்களால் கண்டு மகிழ்கின்றான்.

அம்மாதிரி உலக மக்களின் வழிபாட்டிற்காக வேண்டி காளி தேவியும் பல வடிவங்களில் உற்பவித்திருக்கிறாள்.

இதில் ஒன்பது வகையான ரூப பேதங்களையும். ஆறு வகையான ரூப பேதங்களையும் மஹா நீலக்ரமம், தோடலதந்திரம் என்ற தந்திர நூல்கள் நன்கு விவரிக்கின்றன.

**ஒன்பது வகையான பேதங்கள் :**

| | | |
|---|---|---|
| 1 ஸித்தி காளி | 2 மஹா காளி | 3 பத்ரகாளி |
| 4 ச்மசான காளி | 5 குஹ்ய காளி | 6 தக்ஷிண காளி |
| 7 சாமுண்டாகாளி | 8 தன காளி | 9 காமகூலாகாளி |

ஆறுவகையான ரூப பேதங்கள் இந்த ஒன்பது பேதங்களில் அடங்கிவிடுகின்றன. இவைகளில்லாமல் சில பழைய நூல்கள் "அஷ்ட காளிகள்" என்று எட்டு வகையான ரூபபேதங்களைத் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 1 | காளி | 2 | ஸ்ரீ காலராத்திரி |
| 3 | ஸ்ரீ சாமுண்டி | 4 | ஸ்ரீ சர்வய முண்டி |
| 5 | ஸ்ரீ பத்ரகாளி | 6 | ஸ்ரீ மஹா காளி |
| 7 | ஸ்ரீ சரசண்டிகை | 8 | பைரவி |

காளியின் ஒன்பது வகை ரூபபேதங்களில் குஹ்ய காளியும், தக்ஷிணகாளியும் மிகவும் முக்கியம் வாய்ந்த தெய்வங்களாகப் போற்றப்படுகின்றனர்.

எப்படியிருந்தபோதிலும் மூலசக்தி ஒன்றுதான் என்பதை நாம் மறுக்க முடியாது.

குணங்களுக்கு அப்பாற்பட்டவள், எல்லையில்லா அந்த மாக சக்தியானவள், குணபேதங்களுடன் ஆவிர்பவித்திருந்தபோதிலும் ஸுந்தரிக்கும் காளிக்கும் பக்தர்கள் வேற்றுமை பாராட்ட கூடாது. அப்படி வேற்றுமை பாராட்டுபவனைக் கண்டால் உபாஸகன் மீண்டும் தீக்ஷாதி பூர்ணாபிஷேகம் செய்துகொள்ள வேண்டும்.

**தாராகாண்டே காளி விவரணை**
**நாம அஷ்ட பஞ்சமாதி படல : **
**காளீ ஸுந்தர் யந்தரம் துய :**
**பச்யதி மஹேச்வரி **
**ஸபாபிஷ்டோ மஹாதுர் க்கி**
**ரௌரகம் நரகம் வ்ரஜேத் **
**தஸ்ய தர்சனஜம் பாபம் கோ**
**தாரிக துத்தமிச்யதி **
**ப்ரமாதாத் தர்சனம் சேத்ஸ்யாத்**
**புனர் தீக்ஷாம் ஸமாசரேத் **
**பூர்ணாபிஷேக தீக்ஷாது புன :**
**கார்யாம் மஹேச்வரி **
**புனதீக்ஷா விதனேன வித்யா**
**ஸித்யதி ந அன்யதத **

என்று “சக்தி சந்தம தந்திரம்” - தாரா காண்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமன் பேசுகிறான்

**சென்ற இதழ் தொடர்ச்சி**

**~ 'டாக்டர் நஜன்' ~**

விதேக நாட்டின் எல்லையில் நாங்கள் சென்ற போது, என் கால் பட்டு ஒரு பெரிய கல் பெண்ணாகிவிட்டது. இவள் யார்? என்பது அறியாமல் முனிவரை நோக்கினேன்.

முனிவர் கூறிய விவரம்: இவள்தான் கௌதம மகரிஷியின் பத்னி அகலிகை. இந்திரன் வஞ்சித்தான். கணவர் சாபத்தினால் கல்லானாள்.

இந்திரன் செய்த தவறுக்கு அவனுக்கு சாபம் கிடைத்தது நியாயம்? அன்னை போல் இருக்கிறாளே இவளுக்கு ஏன் சாபம்? என்ற என் கேள்விக்கு அவள் வஞ்சிக்கப்பட்ட கதையை முனிவர் விவரித்தார். பின் அகலிகையை கௌதமரிடம் ஒப்படைத்துவிட்டு எங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தோம்.

**இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்**
**இனி இந்த உலகுக்கெல்லாம்**
**உய்துண்ணமின்றி மற்றோர்**
**துயர் வண்ணம் உறுவதுண்டோ?**
**மைவண்ணத்து அரக்கி போரில்**
**மழை வண்ணத்து அண்ணலே உன்**
**கைவண்ணம் அங்கு கண்டேன்**
**கால் வண்ணம் இங்கு கண்டேன்.**

என்று முனிவர் மகிழ்ச்சியால் பரவசமாகிவிட்டார்.

மிதிலை மாநகர்மீது காற்றில் அசைந்த கொடிகள் எங்களை 'வா' 'வா' என்று அழைப்பது போலிருந்தது.

யானைகள் ஒன்றுக்கொன்று செல்லமாக மோதிக் கொள்கின்றன. குதிரைகள் தலைதெறிக்க ஓடுகின்றன. நடனம், சங்கீதம் இத்தகைய விருந்துகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகின்றன. பெண்மணிகள் உத்யான வனங்களில் பந்தாடுகிறார்கள். மிதிலா நகரமே ஒரு சிங்காரப் பூஞ்சோலையாகத் தென்பட்டது.

நாங்கள் நடந்து செல்லும்போது ஒரு பேரழகியின் முகத்தை உப்பரிகையில் பார்த்தேன். நானும் பார்த்தேன் அவளும் பார்த்தாள். என் மனதை அவள் கொள்ளை கொண்டாள் இவள் தான் சீதை. இவளை மணக்க வேண்டுமென்றால் சிவதனுஸை எடுத்து நாண் ஏற்ற வேண்டுமாம். இது என்ன பெரிய காரியம்? ஜனகருக்கு நான் மாப்பிள்ளையாக வரவேண்டும் என்று ஆசை. இந்த இளைஞன் சிவ தனுஸை எடுத்து நாண் ஏற்று வானா? அப்படிச் செய்தால் என் பெண் பாக்கியசாலிதான் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

மேரு மலையே வில்லாக வளைத்த சிவபெருமான் உபயோகித்த வில்லாம் இது விசுவாமித்ர முனிவர் காட்டிய குறிப்பறிந்து, நான் அவ்வில்லை அநாயாஸமாகத் தூக்கி நாண் ஏற்ற முயன்றபோது அந்த வில் முறிந்துவிட்டது.

## என் மனைவி சீதை

யாகத்திற்காக மிதிலை அரசர் ஜனகர் பூமியை உழுதபோது, பூமியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டவள் சீதை. எனவே அவள் பூமாதேவியின் குமாரி. இவளை ஜனகர் தம் பெண்ணாகவே வளர்த்தார். அவருக்கு ஊர்மிளை என்ற பெண்ணும் பின்னர் பிறந்தாள். சீதைக்குத் திருமணம் நடத்த, தன்னிடமுள்ள சிவ தனுஸை யார் நாண் ஏற்றிக் காட்டுகிறார்களோ அவருக்கே சீதை மாலையிடுவாள் என்று அறிவித்திருந்தார்.

இம்மாதிரி நிபந்தனை வைப்பதை 'கன்யா சுல்கம்' என்பர்.

இத்துனுஸை நான் வளைத்த பின், திருமணம் 'ஜாம்' 'ஜாம்' என்று நடைபெற்றது. எனக்கும் சீதைக்கும், லக்ஷ்மணனுக்கும் ஊர்மிளைக்குப் திருமணம் நடைபெற்றது. ஜனகரின் சகோதரரின் இரு குமாரிகள் மாண்டவி, ச்ருதகீர்த்தியை முறையே பரதனும் சத்ருக்னனும் மணந்தனர்.

என் கையில் சீதையின் கைகளை சேர்ப்பித்து ஜனகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயம்ஸிதா மமஸுதா
ஸிஹதர்மசரீ தவ
ப்ரதீச்ச சைனாம் பத்ரம்தே
பாணிம் கிருண்ணீஷ்வ பாணீநா
பதிவ்ரதா மஹா பாகா
சாயா இவாநு கதா ஸதா !

என்று மந்திரம் சொல்லி தாரை வார்த்தார். இதன் அர்த்தம் என்ன தெரியுமா?

"இதோ என் மகள் சீதை. நீ செல்லும் தர்ம நெறியில் இவள் உன்னுடன் துணையாகச் செல்வாள். கையைப் பிடித்துப் பெற்றுக்கொள்வாய். மங்களம் ஆகுக. கற்பைக் காத்து மிக பாக்யவதியாக உன் நிழலைப்போல உன்னைப் பின்பற்றி நிற்பாள். எப்போதும் பிரிய மாட்டாள்".

மிதிலையிலிருந்து திரும்பும்போது பரசுராமர் விடுத்த சவாலை ஏற்று அவருடைய விஷ்ணு தனுசை வளைத்து நாண் ஏற்றிக் காட்டிவிட்டு எல்லோரும் அயோத்தி வந்து சேர்ந்தோம். இதன் பின் 12 ஆண்டுகள் என் இல்லற வாழ்க்கை நிம்மதியாக நடைபெற்றது. நானும் சீதையும் நகமும் சதையும் போல, பூவும் மணமும் போல இல் வாழ்க்கையை நடத்தினோம்.

இதற்குப் பின் தான் ராமாயணக் கதையே ஆரம்பமாகிறது.

## அன்னை கைகேயி கேட்டவரம்

ஒருநாள் என் தந்தை என்னை கூப்பிட்டனுப்பினார். "உனக்கு பட்டாபிஷேகம் செய்வதாக தீர்மானித்து விட்டேன். நேற்றிரவு கெட்ட ஸ்வப்னங்கள் கண்டேன். ஜாதகப்படி எனக்கு துக்கமும் மரணமும் சமீபத்தில் சம்பவிக்கும் என்கிறார்கள். ஆகவே உன் பட்டாபிஷேகத்தை நாளைக்கே (சித்திரை புஷ்ய நக்ஷத்திரம்) நடத்துவதாக முடிவு செய்து விட்டேன். பரதன் ஊரில் இல்லை. அதற்காக இந்த சுப காரியத்தை நிறுத்த வேண்டியதில்லை" என்றார்.

ஆனால் பட்டாபிஷேகம் நின்றுவிட்டது. காரணம் அன்னை கைகேயி கேட்ட இருவரங்கள். ஒன்று நான் 14 ஆண்டுகள் காட்டில் வனவாசம் செய்ய வேண்டும். மற்றொன்று தம்பி பரதன் பட்டம் ஏற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் எனக்கு எவ்வித வருத்தமும் இல்லை. அன்னை கைகேயிக்கு என்மேல் மிகுந்த அன்பு உண்டு. அவர்கள் என் நன்மையை உத்தேசித்தே இப்படி செய்யதிருக்க வேண்டும். நான் ஆண்டால் என்ன? பரதன் ஆண்டால் என்ன?

அப்பாவைப் பார்க்கத்தான் மிகக் கஷ்டமாக இருந்தது. அவர் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டார். அன்னை கைகேயி இந்த இரண்டு விஷயங்களைச் சொல்லி இது அரசன் ஆணை என்றதும் "ஏம்மா! நீ சொன்னால் நான் கேட்க மாட்டேனா. இப்போதே காட்டிற்குப் போகிறேன்.' என்று கிளம்பிவிட்டேன். தம்பி லக்ஷமணன் என்னை விட்டுப் பிரிந்திருக்கமாட்டான். சீதையும் என்னவெல்லாமோ தர்ம நியாயத்தை எடுத்துச் சொல்லி கூட வருவேன் என்று பிடிவாதம் பிடித்தாள். சரி என்று அவளையும் அழைத்துக்கொண்டு காட்டிற்குப் புறப்பட்டு விட்டோம்.

புறப்படுமுன் லக்ஷமணன், கோபம் கொண்டு அப்பாவை எதிர்த்து 'தாப் தூம்' என்று குதித்தான். 'அப்பா லக்ஷமணா' யாரையும் குறை சொல்லாதே. இது விதியின் விளையாட்டு என்று சமாதானப்படுத்தினேன். இதனைக் கம்பன்

**நதியின் பிழையன்று நறும்புனல்**
**இன்மை: அற்றே**
**பதியின் பிழையன்று, பயந்து**
**நமை புரந்தாள்**
**மதியின் பிழையன்று மகன்**
**பிழையன்று மைந்த**
**விதியின் பிழை நீ இதற்கு**
**என்ன வெகுண்டதென்றான்.**

என்று பாடியிருக்கிறார்.

**(தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்க்கையில் காணும் நவரஸங்கள்

~ ஸ்ரீலக்ஷ்மி ~

மனத்தின் போக்கு ஒரு நிலையில் இருப்பதில்லை. அது இன்பமுற்றிருந்தால் உலகமே இன்ப மயமாகத் தோன்றும். அது துயருற்றிக்குமாயின் அதற்குத் துன்பம் தவிர எதுவுமே தோன்றாது.

காளிதாசன் தன் 'சாகுந்தலத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார். "மனிதன் சில சமயம் அழகிய பொருள்களைப் பாக்கிறான். இனிய குரலோசையைக் காதால் கேட்கிறான். இன்பம் அனுபவிக்கும் அவன் திடீரென்று கவலை கொள்கிறான். உண்மையில் அவன் மனம் ஜன்மாந்திரத்தில் தான் அனுபவித்த சுக துக்கங்களை நினைத்துக் கொள்கிறது. அவை இவன் மனத்தில் 'வாஸனா' என்னும் அழியா வடிவத்தில் இருப்பவை.

இந்த ரஸங்களில் இன்பமும் துன்பமும் தான் பிரதானமாகத் தெரிகிறது. இதனால் மற்ற ரஸங்கள் முக்கியமில்லை என்றாகிவிடாது.

## அற்புதம்

ஒரு குடும்பத்தில் எந்த வகையிலேனும் ஒரு அற்புதம் இருக்கும். உலகத்தினா் வியப்படையும்படி இருப்பதே அற்புதம். அக்குடும்பத்தில் தாத்தா ஜட்ஜ், பிள்ளை ஜட்ஜ், பேரன் ஜட்ஜ என்றால் அது ஒரு அற்புதமே. ஒருவருடைய பையன்கள் ஐந்து பேரும் ஐ. ஸி. எஸ். என்றால் அற்புதம். அந்த வீட்டு மாமி காலையில் 4 மணிக்கே எழுந்து குழந்தைகளையும் எழுப்பி தலைவாரி பின்னி குளிக்க வைத்து இவ்வளவும் செய்த பின்பே சூரியன் உதயமாகிறது என்பதும் இக்காலத்தில் அற்புதம் தான். பிரபல வக்கீல் டி. ஆர். ராமச்சந்திர அய்யா் என்பவா் மயிலாப்பூரில் இருந்தாா். பெரிய புகழ்பெற்ற வக்கீல், காலையில் 1008 காயத்ரி ஹோமம் வைஸ்வதேவம் இவை எல்லாம் பண்ணி முடித்த பின்தான் கோர்ட்டுக்குப் போவாா். இது ஒரு அதிசயம் இல்லையா?

அற்புதம் என்ற சொல்லுக்கு அழகு, அதிசயம், வியப்பு, புதுமை என்ற பல பொருள்கள் உண்டு. கணவன் மனைவிக்கு ஏற்றபடியும், மனைவி கணவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றபடியும் அமைவதும் ஒரு அற்புதம் தான். இந்த அற்புதம் இயற்கையாக அமைவது என்றாலும் நாமும் நம்மை மாற்றிக்கொள்வதன் மூலம் செயற்கையாகவும் அமைத்துக் கொள்ளலாம். அதில் வாழ்க்கையின் வெற்றியிருக்கிறது.

## கோபம்

'கோபம் பாபம் சண்டாளம்' என்பர் கோபத்தினால் ஏற்படும் ஆத்திரத்தில் ஏடாகூடமாக கொலையே கூட நடந்துவிடும் என்பதை எச்சரிக்கவே இப்படிச் சொல்வது வழக்கம். கோபம் வருவது என்பது இயல்பு ஆனால் எதற்கெடுத்தாலும் கோபம் என்பது ஆபத்தில் கொண்டு விடும்.

எதிரியின் தீச்செயலை நினைத்து மனம் கொதிக்கும் நிலையைக் குரோதம் என்பார்கள். இக்குரோதம் மனிதனுடைய புத்தி, பகுத்தறிவு இவைகளை மழுங்கச் செய்து பொங்கியெழும் ஒரு உணர்ச்சி. 'குரோதம் கொண்டவன் குருவையும் கொல்லுவான்' என்பது பழமொழி.

துர்வாஸர் மாபெரும் தபஸ்வி ஆனால் மிகவும் முன் கோபக்காரர். இதனால் அவர் தவப்பலன்கள் அடிக்கடி விரயமாகிக் கொண்டேயிருந்தன. இந்தப் பெருங்குறை அவருக்குத் தெரியாமலில்லை. கடைசியில் திருக்களர் என்ற க்ஷேத்திரத்தில் இறைவனை வழிபட்டு இந்த கோபத்தை அடியோடு விட்டொழித்தார்.

கோபம் இருக்கும் இடத்தில் குணம் இருக்கும் என்பார்கள். காரணம் கோபம் போன பின் 'அடடா! அப்படிச் செய்து விட்டோமே! நாம் அப்படி செய்திருக்கக் கூடாது என்று மனது சுட்டிக்காட்டும்; தவறை உணர்வது நல்லதேதான். ஆனால் நடக்கக் கூடாதது நடந்து விட்டால் என்ன தவறை உணர்ந்தும்என் பலன்? ஆகவே கோபத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் வேண்டும். "உனக்குக் கோபம் வந்தால் உடனே ஒன்று இரண்டு மூன்று என்று பத்து வரை சொல்லு உன் கோபம் இருந்த இடம் தெரியாமல் பறக்கும்" என்று ஒரு பெரியவர் கூறியிருக்கிறார்.

பிள்ளைகளை வளர்ப்பது, மனைவியைக் கட்டுப்படுத்துவது இதற்கெல்லாம் கொஞ்சம் கோபம் வேண்டும். இதை செய்தால் அப்பா கோபிப்பார்; அகத்துக்காரர் கோபிப்பார் என்ற பயம் இருக்க வேண்டும். இதற்குத் தான் 'கொட்டினால் தேள் இல்லாவிட்டால் பிள்ளைபூச்சி' என்பார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை

கருணை என்ற சொல்லுக்குக் கிருபை, பட்சம், அன்பு, அருள், தயவு, இரக்கம், ஈகை என்றெல்லாம் பொருள் உண்டு. வாழ்க்கை வெற்றி பெற அன்பும் கருணையும் மிக மிக அவசியம். அன்பே சிவம் என்றார் திருமூலர். இந்த அன்பை மனிதர்களிடம் மட்டுமின்றி மிருகம், பறவை, புழு, பூச்சி ஆகிய எல்லா ஜீவராசிகளிடமும் காட்ட வேண்டும். 'இரக்கமே என் உயிர்' என்று வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் கூறுவது வழக்கம். அவர் பாடிய பாடல்கள் எல்லாம் கருணை ரஸமேயாகும். கடவுளின் உண்மை சொருபத்தைக் கருணை என்று கண்டவர் அவர். இவர் பயிரினுள்ளே உயிர் இருக்கிறது. அவை வாடி வதங்கக் கூடாது என்று பாடினார். இவர் ஏழை எளியவர்களிடம் இரக்கம் கொண்டவர். நோயுற்றவரைக் கண்டு வருந்தினார்.

**வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்**
**வாடினேன் பசியினால் இளைத்தே**
**வீடுதோறும் இரந்தும் பசி ஆறாது அயர்ந்த**
**வெற்றரைக் கண்டுள்ளம் பதைத்தேன்**
**நீடிய பிணியில் வருந்துகின்றார் என்**
**நேர் உறக்கண்டுளம் துடித்தேன் ஈடில் மானிகளாய்**
**ஏழைகளாய் நெஞ்சு இளைத்தவர்**
**தமைக்கண்டே இளைத்தேன்.**

என்று சொல்லி கருணா ரஸத்தின் உண்மை தத்துவத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளக்குகிறார்.

இந்த கருணா ரஸத்தை அடிப்படையாகக் கொண்டதே அகிம்ஸை. இந்தக் கருணை இருக்கும் பட்சத்தில் புலால் உணவை ஒருபோதும் யாரும் ஏற்கமாட்டார்கள். ஊனைத் தின்று ஊனை வளர்ப்பானேன்?

சில மகான்கள் சாதாரணமாக கருணை மட்டும் படைத்திருந்தால் போதாது 'உன் பகைவனிடமும் கருணை காட்டு' என்கிறார்கள். தங்களுக்குத் தீங்கு இழைப்பவர்கள் "அவர்களே அறியாமல் செய்கிறார்கள் ஆகவே தெய்வமே அவர்களை மன்னித்து விடு" என்கிறார்கள். இத்தகைய மனப்பான்மை ஏற்பட்டுவிடும் பட்சத்தில் உலகமே இன்பமயமாகிவிடுமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை காட்டுவதெல்லாம் ஒரு பிரதிபலனை எதிர்பாராமல் இருக்க வேண்டும். ஒருவருக்கு நல்லது ஒன்று செய்து அதற்குப் பிரதிபலனை எதிர்பார்த்தால் அந்த நல்ல செய்கைக்கு பலன் இல்லை. காரணமில்லாமல் கருணை காட்டுபவன் இறைவன் ஒருவனே. அதனால் அவனுக்கு அவ்வியாஜ கருணாமூர்த்தி என்று ஒரு பெயர்.

வால்மீகியின் மனத்தில் தோன்றிய கருணா ரஸமே ராமாயணம் தோன்றக் காரணமாக இருந்தது. உள்ளத் தெளிவிற்கு கருணை ஒரு சகாணைக்கல் போன்றது.

## அருவருப்பு

இதற்கு பீபத்ஸம் என்றும் பெயர். உயிர் இருக்கும் வரை காதலன் காதலி என்று ஒன்றாக இழைந்தவர்கள்; இவர்களில் ஒருவர் சவமானால் அதைத் தொடக்கூட அருவருப்பு அடைகிறார்கள். இந்த உடம்பின் மீது தோல் மூடிக்கொண்டிருப்பதால் உள்ளே என்ன எப்படியிருக்கிறது என்பது தெரியவில்லை. இவ்வுடம்பின் மேல் பக்கத்தை உள்ளேயும் உள் பக்கத்தை மேலேயும் வைத்து விட்டால் காக்காய்களையும் கழுகுகளையும் விரட்ட கழியோடுதான் மனிதன் நடக்க வேண்டும் என்கிறார் ஒரு கவிஞர்.

மணமுள்ள மலரின் வாசனை நுகர்ந்து மலரும் முகம், மலத்தைக் கண்டு முகம் சுளிப்பானேன்? அதுபோன்ற அருவருக்கத் தக்கவைகளை ஒதுக்கப் பழக வேண்டும். இதனால் தீக்குணங்களும் தீச்செயல்களும் அறவே ஒழியும்.

## பயம்

வெறுப்பைத் தரும் பொருள்களை நாம் தவிர்க்க முடியாவிட்டால் அதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பயமும் ஏற்பட ஆரம்பிக்கும் யுத்த களமும், மயானமும் ஓரளவு வெறுப்பையும் பயத்தையும் கொடுக்கத்தான் செய்கின்றன. இதனால்தான் பரத முனிவர் பீபத்ஸத்திலிருந்து பயம் உண்டாயிற்று என்று குறிப்பிடுகிறார்.

பயம் என்பது மனிதர்களின் உடன் பிறந்த சொத்து. அவரவர்கள் மனோ தைரியத்திற்கு ஏற்றவாறு பயத்தை உண்டாக்கும் பொருள்கள் வேறுபடலாம். எதிரிகளுக்கு மட்டும் அஞ்சுவதல்ல; பாழும் வினைகளுக்கும் பயப்படுவதுண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பயம் இருக்க வேண்டும். பிறப்பு என்ற நோய் வந்துவிடுமோ என்று மகான்கள் பயப்படுகிறார்கள்.

தாயுமானவர் இப்படிப் பயப்படுவதை தன் பாடலில் குறிப்பிட்டிருக்கிறார்.

**இனியே தெமக்குள் அருள் வருமோ எனக்கருதி**
**ஏங்குதே நெஞ்சம் ஐயோ**
**இன்றைக்கு இருந்தாரை நாளைக்கிருப்பரென்று**
**எண்ணவோ திடமில்லையே**
**அறியாமாய் இந்த உடலைச் சுமந்து நான்**
**அந்தகர்க்கு ஆளாக்கவோ**
**ஆடித்திரிந்து நான் கற்றதும் கேட்டதும்**
**அவலமாய்ப் போதல் நன்றோ**

என்று பயப்படுகிறார். இத்தகைய பயம் வாழ்க்கையில் எல்லோருக்கும் இருக்க வேண்டியது அவசியம்.

## வீரம்

வீரியம் என்று சொல்லப்படும் வீர ரஸம் மிக விறுவிறுப்பானது. ரசிக்கத்தகுந்தது. எல்லோருக்கும் அவ்வளவு எளிதாய் அமையாதது. நெஞ்சுறுதி இருந்தாலொழிய இந்த வீர ரஸம் கிட்டாது. வாழ்க்கையில் இந்த ரஸம் ஏற்படப் பல சந்தர்ப்பங்கள் வரும். எந்த சிக்கலான சந்தர்ப்பத்திலும் மனம் குன்றாமல் விடா முயற்சியைக் கைப்பற்றுபவனே வீரன். போர்க் களத்தில் முன்னணியில் நிற்பது மட்டுமல்ல வீரனுக்கு அடையாளம். ஆயுள் முழுவதும் தன் புலன்களை அடக்குவதில் பாடுபடுவதிலும் வீரம் உள்ளிருப்பதைக் காட்டுகிறது.

**பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு**
**மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன**
**மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்**
**பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொறியுமே**

என்கிறார் திருமூலர். இந்த ஐந்து பசுக்களும் ஐம்புலன்கள். இவைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக்குள் அடக்குவது என்பது லேசான காரியமல்ல. இந்த புலனடக்கம் தெய்வ நாட்டத்துடன் கூடிய அன்பு நெறியில் சாத்தியம்; ஆனால் இதற்கு மன் உறுதி என்ற வீரம் வேண்டும்.

## ஹாஸ்யம்

நகைச்சுவை, வாழ்வில் சுவை ஏற்பட இது மிகமிக அவசியம். உயிர் ஜீவன்களில் மனிதன் மட்டுமே சிரிக்கும் சக்தியைப் பெற்றிருக்கிறான். அதனால்தான் சிரித்து வாழ வேண்டும் என்கிறார்கள். வேடிக்கை என்றால் எல்லோருமே விரும்புவார்கள். நல்ல நகைச்சுவை இருந்தால் பல காரியங்களையும் வாழ்க்கையில் சாதிக்க முடியும்.

இதை ஆங்கிலத்தில் 'ஹ்யூமர்' (Humour) என்கிறார்கள். நகைச்சுவையுடன் பெரிய கருத்தும் உள்ளடங்கியிருக்க வேண்டும். மேலாகப் பார்ப்பவர்களுக்கும் சாதாரணமான கருத்து தெரிய வேண்டும் என்கிறார்கள். நகைச்சுவை ஏற்படுத்துவதற்காகவே விகடகவிகள் அக்கால அரச சபையில் இடம் பெற்றிருந்தார்கள். சிருங்காரத்திலிருந்தே ஹாஸ்யம் பிறந்ததாகக் கூறுவதும் உண்டு.

## சிருங்காரம்

வாழ்க்கையில் யாவரும் விரும்பும் ரஸம், காதல் என்ற இன்பநிலை எவரையும் வசீகரிக்கும் தன்மை வாய்ந்தது. தர்ம, அர்த்த, காம, மோட்சம் என்ற நான்கு புருஷார்த்தங்களில் இது இடம் பெற்றுள்ளது. இன்ப ரஸத்தில் ஈடுபடாதவர்கள் எவருமே இருக்க முடியாது. ஞானிகளும் காதல் வசப்பட்டதற்கு எவ்வளவோ உதாரணங்கள் இருக்கின்றன. ஆழ்வார்கள், மகான்கள், சிவனடியார்கள் இந்த சிருங்கார ரஸத்தைப் பக்தி மார்க்கத்தில் செலுத்தித் தங்களை பெண்மணிகளாகப் பாவித்துக் கொண்டு இறைவனை காதலிக்கிறார்கள்.

இந்த சிருங்கார ரஸம் சுவாரஸ்யப்பட ஊடல் மிக அவசியம். பெண்கள் தங்கள் கணவர்களிடம் கோபம் கொள்வதே ஒரு தனி அழகு. இதற்கு "ப்ரணயகோபம்" என்பார்கள். அதாவது அன்பினால் பிறந்த கோபம் என்ற அர்த்தம். இந்த சிறு கோபம் குறுக்கிடாமல் இருந்தால், சிருங்கார ரஸம் சுவாரஸ்யப்படாது. நாயகி ஊடல் கொள்வதும் நாயகன் சமாதானம் செய்வதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகி கோபத்தை விடாமல் பிடிவாதம் செய்வதும் இவ்வுலகத்தில் அனுபவிக்கும் 'சுவர்க்க சுகங்கள்' என்று கவிஞர்கள் வர்ணிக்கிறார்கள்.

சோகமும் ஒரு ரஸம் தான். அதை சமாளிக்க மனோதிடம் இருந்தாலே போதும். கஷ்டம் வரும் காலத்தில் 'சிரி' என்று சொல்லியிருக்கிறார் வள்ளுவர்.

## சாந்தம்

சாந்தம் என்றால் பொறுமை: 'சாந்தம் சாகரத்திலும் பெரிது' என்று வடநூலாரும் 'பொறுமை கடலினும் பெரிது' என்று தமிழ் நூலாரும் கூறுவர். எல்லா ரஸங்களும் சாந்த நிலையிலிருந்து எழுந்து சாந்தத்திலேயே லயித்து விடுகின்றன என்பர். சாந்தம் என்ற சமநிலையை ஒரு ரஸமாகக் கொள்ளவில்லை என்பதை பின்கண்ட தொல்காப்பியச் செய்யுளிலிருந்து அறியலாம்.

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப**

சுவைகள் எட்டே என்கிறது இந்த சூத்திரம். சமநிலை என்பது முனிவர்களிடம் காணப்படும் நிலை. ஆகவே அதை சேர்க்கவில்லை போலிருக்கிறது.

ஆதி காவியமான வால்மீகி ராமாணயத்தில் நவரஸங்கள் எப்படி கையாளப்படுகின்றன என்பதைப் பேசும்போது சிருங்காரம் க்ஷிதி, நத்தினி என்று தொடங்கி சாந்தம் முனி ஜனை: என்று முடிகிறது. இதே கருத்தை.

**சிருங்கார ஹாஸ்ய கருணா ரௌத்ர வீர பயாநகா**
**பீபத்ஸ அத்புத சாந்திஸ் ச நவநாட்யே ரஸாஸ்மிருத யோ**


என்ற வரிகளும் குறிக்கின்றன.

இவ்வளவும் வாழ்க்கையில் இடம் பெற்றாலும் உண்மையான ஆனந்தத்தை எப்படி அடைவது? இதற்கு காஞ்சி காமகோடி பெரியவர்கள் அளிக்கும் பதில்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெளி வஸ்துக்களிலிருந்து நமக்கு ஆனந்தம் வரவில்லை. நம்மிடமிருந்தேதான் பிறக்கிறது. நமது உண்மை ஸ்வரூபமான ஆனந்தத்தையே அஞ்ஞானத்தினால் மூடி மறைத்துக் கொண்டாலும் கூட நம்முடையது என்று ஒன்றிடம் சம்பந்தம் வைக்கும் போதுதான் அதிலிருந்து ஆனந்தம் அடைகிறோம். அந்த சம்பந்தம் போய்விட்டால் ஆனந்தம் போய்விடுகிறது. நிரந்தர ஆனந்தம் ஏற்பட ஆசையை அடக்குவது ஒன்றே வழி, அப்போதுதான் பூரண சாந்தநிலை ஏற்படும்."

**(காஞ்சிப்பெரியவர்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வரலக்ஷ்மி விரத மகிமை

~ ஸ்ரீ பவன் ~

தேவர்கள் வசிக்கும் கைலாஸ பர்வத சிகரத்தில் பரமசிவன் பார்வதியுடன் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கிறார். அச்சமயம் பார்வதி, "நாதா, நான் தங்களை ஜெயித்துவிட்டேன்" என்றார். இப்படி இருவருக்கும் வாக்குவாதம் முற்றியது.

அப்பொழுது அங்கிருந்த சித்திரநேமி என்ற கணதேவதையை இருவரும் மத்யஸ்த்தம் கேட்க, அவன் பக்ஷபாதத்தால், பரமசிவன் தான் வெற்றி கொண்டார், எனக் கூறினான். அதற்குப் பார்வதி அவன்மீது கோபம் கொண்டு" நீ பொய் சொன்னதால் குஷ்ட ரோகியாகி ஒளியிழந்து தவிப்பாயாக" என்று சபித்தாள்.

இதற்குப் பரமசிவன் வருந்தி "தேவி இந்த சித்திரநேமி எப்பொழுதுமே பொய் பேசாதவன். அவன் உண்மையைத்தான் கூறினான். நீ அவனை வீணாகச் சபித்து விட்டாயே! அவன் மீது நீ அருள் கூர்ந்து அவன் சாபத்தை அகற்றுவாயாக" என்று தேவியை வேண்டினார்.

அதற்கு மனமிரங்கிய பார்வதிதேவி எப்பொழுது அழகிய தடாகதீரத்தில் தேவகன்னிகைகள் புண்ணியமான ஒரு விரதத்தை அனுஷ்டிக்கிறார்களோ, அப்பொழுது உன் சாபம் நீங்கும் என்று கூறினாள். உடனே அவன் கீழே சாய்ந்து விட்டான். பிறகு சித்ரநேமி, சில தினங்களில் ஒரு தடாகக் கரையில் குஷ்டரோகியாகி அங்கு வாசம் புரிந்து வந்தான். ஒருநாள் அங்கே வந்த தேவப் பெண்களைக் கண்டான். தேவி பூஜையில் ஈடுபட்ட அந்தப் பதிவிரதைப் பெண்கள் தேவியை வணங்கி வழிபடுவதைக் கண்டு, அம்மையீர் தாங்கள் செய்யும் பூஜை யாது? இதை நான் செய்யலாமா? நான் பார்வதியின் சாபத்தால் குஷ்டரோகியாகித் துன்புற்றிருக்கிறேன். என் துன்பம் நீங்கும் வழியைத் தாங்கள் கூறியருள வேண்டும் என்று வேண்டினான்.

அப்ஸரப் பெண்கள் கூறியதாவது : நாங்கள் இன்று வரலஷ்மீ விரதம் என்னும் விரதத்தை அனுஷ்டிக்கிறோம். இது திவ்யமானது. கோரும் வரங்களை அளிக்கக் கூடியது. சூரியன் கடகத்தில் இருக்கும் போது, அதாவது கங்கையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமுனையும் சேரும் காலத்தில் துங்க பத்ரா நதிக்கரையில், சிராவண மாதத்தில் சுக்ல பக்ஷத்தில் வெள்ளிக்கிழமை அன்று முறைப்படி மஹாலக்ஷமியைப் பற்றியதான இந்த விரதத்தை தொடங்க வேண்டும்.

தங்கத்தினால் நான்கு கைகளுடன் லக்ஷமியின் பிரதிமையைச் செய்ய வேண்டும். வீட்டைப் தோரணங்கள் கோலங்கள் முதலியவைகளால் அலங்கரிக்க வேண்டும். வீட்டின் கிழக்குத் திக்கில், முக்கியமாக ஈசானிய மூலையில், ஒருபடி அரிசியைப் பூமியில் பரப்பி அதன் மீது ஒரு கலசத்தை வைத்துத் தீர்த்தத்தை நிரப்ப வேண்டும். பொன்னையும், பழங்களையும், தளிர்களையும் அதன் மீது வைத்து புதிய வஸ்திரத்தைச் சுற்ற வேண்டும். அந்தக் கலசத்தின் மீது லக்ஷமியின் பிரதிமையை வைத்து முறைப்படி பூஜை செய்ய வேண்டும்.

இவ்வாறு தேவகன்னிகைகள் செய்த இந்த பூஜையை சித்திரநேமி இமைகொட்டாமல் பார்த்துவந்தான். ஹோமப் புகையை நுகர்ந்ததாலும், நெய்த்தீபத்தை கண்டதாலும் அவனுடைய குஷ்ட நோய் நீங்கித் தங்க நிறம் பெற்றான்.

இவ்வாறு மன அமைதியுடன் இந்த விரதத்தை மேற்கொண்டு ஐந்து வாயன தானம் செய்து கதையை கேட்க வேண்டும். பிறகு மௌனமாக இருந்து ஐவகை ஆராத்திகளைச் செய்து பூஜிக்க வேண்டும்.

பிறகு பிராம்மணனுக்கும், ஸன்னியாஸிக்கும், தெய்வத்திற்கும், பிரம்மச்சாரிக்கும், சுவாஸினிக்கும் முறையே ஐந்து வாயன தானங்களைச் செய்தான். அதன் பின், தேவிக்கு நமஸ்காரம் செய்து தன் இருப்பிடம் சென்றான்.

பிறகு கைலாஸம் சென்று பார்வதீ பரமேசுவரரை வணங்கி அவரருகில் நின்று "தேவி வரலக்ஷ்மீயின் அருளாள் தங்கள் திருவடியைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது." என்று கூறி வணங்கினான். அப்பொழுது பரமசிவன் "இன்றுமுதல் நீ இந்தக் கைலாசத்தில் ஸகல போகங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பாயாக. பிறகு இந்த விரதத்தின் மகிமையால் வைகுந்தலோகம் சேருவாய்." என்றார்.

முன்பு பார்வதியும் ஸத்புத்திர லாபத்திற்காக இந்த விரதத்தை அனுஷ்டித்ததால், அதன் மகிமையால் அவளுக்கு ஷண்முகன் தோன்றினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விரதத்தை பதிவிரதைப் பெண்கள் அனுஷ்டிப்பார்களாக. மற்றும், குண்டினம் என்ற நகரத்தில் சாருமதி என்ற பெண் இந்த வரலக்ஷமீ விரதத்தை உபதேசிக்கப் பெற்று, சிராவண மாதம் சுக்ல பக்ஷ பூர்ணிமையுடன் கூடிய வெள்ளிக்கிழமை அன்று தேவியை வரித்து ஸகல பாக்கியங்களையும் பெற்றாள்.

விக்கிரமாதித்தன் நந்தனிடமிருந்து ராஜ்ஜியத்தைப் பெற்றான். மனைவி இல்லாத நந்தன் இந்த விரதத்தைச் செய்து அழகிய மனைவியை அடைந்தான். அவன் மனைவியும் பிள்ளைப் பேற்றுக்காகக் காக்கும் மகனை அவள் பெற்றாள். இப்படிப் பலா் அனுஷ்டித்தால் அதுமுதல் இந்தச் சிறந்த வரலக்ஷமீ விரதம் இவ்வுலகில் பரவியது.

எனவே சிராவண மாதம் சுக்ல பக்ஷத்தில் பௌர்ணமிக்கு முன் வருகின்ற வெள்ளிக்கிழமை அன்று வரலக்ஷமீயை மகிழ்விக்கக் கூடியதான இந்த ஸம்பத் விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். லக்ஷமீயை மகிழ்விக்கும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கும் பெண்மணி இவ்வுலகில் ஸகல போகங்களையும் அனுபவித்த பின் வைகுந்தம் சேருவாள்.

எல்லா சுக்ல பக்ஷத்திலும் எல்லா வெள்ளிக் கிழமைகளிலும் மஹாலக்ஷமியை முறைப்படி பூஜித்த பின் சுவாஸினி சுமங்கலி பூஜை செய்தால், வாழ்நாள் முழுவதும் தனம், ஆரோக்கியம் முதலியன ஸம்பத்துகள் எல்லாம் உண்டாகும். ஸந்தானம் விருத்தியாகும். சுமங்கலியாக வெகுகாலம் வாழ்வார்கள்.

இந்த வரலக்ஷமீ விரத மகிமையைப் படிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்குப் வரலக்ஷமியின் அருளால் தனதான்ய ஸம்பத்துக்கள் உண்டாகும்.

**சர்வ மங்கள மாங்கல்யே**
**சிவே சர்வார்த்த ஸாதஹே /**
**ஸரண்யே த்ரியம்பிஹே தேவி**
**நாராயணி நமோஸ்துதே //**

**~ சுபம் ~**

**~ ஸ்ரீபவன் ~**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருள்ஜோதி வினா விடை

~ ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் ~

**வினா : 1.** இந்து சமயத்தின் பிரிவுகள் எத்தனை, அவை எவை?

**விடை :** ஆறு பிரிவுகள், அவையாவன
1. சைவம், 2. வைஷ்ணவம், 3. சாக்தம்,
4. கௌமாரம் 5. காணாபத்தியம், 6. சௌரம்.

**வினா : 2.** இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளில் முழுமுதற் கடவுளாக வழிபடும் தெய்வங்கள் எவை?

**விடை :**

| | | | |
|---|---|---|---|
| சைவசமயம் | - சிவன், | கௌமாரம் | - முருகன் |
| வைஷ்ணவம் | - விஷ்ணு, | காணாபத்தியம் | - கணபதி |
| சாக்தம் | - பராசக்தி, | சௌரம் | - சூரியன் |

**வினா : 3.** இந்து சமயத்தவர் முதலில் வழிபாடு செய்யும் தெய்வம் யார்?

**விடை :** விநாயகர் (விநாயகர் வழிபாடு செய்யாமல் எந்தவொரு காரியத்தையும் இந்துக்கள் செய்யமாட்டார்கள்)

**வினா : 4.** விநாயகன் என்பதன் பொருள் என்ன?

**விடை :** வி + நாயகன் - விநாயகன். தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவன்.

**வினா : 5.** விநாயகப் பெருமானின் உருவ தத்துவம் என்ன?

**விடை :** விநாயகருடைய வடிவம் ஓர் விந்தையானது யானையின் தலை, பெருவயிறு, மனித உடல், ஐந்துகரங்கள் கூடிய வடிவம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இடையின் கீழ்பகுதி | - | மனித உடம்பு |
| இடைக்குமேல் கழுத்துவரை | - | தேவ உடம்பு |
| கழுத்துக்குமேல் | - | விலங்கின் தலை |
| பெருவயிறு | - | பூதவடிவம் |
| ஒருபக்க கொம்பு | - | ஆண் தன்மை |
| மற்றொரு கொம்பு | - | பெண் தன்மை |

எனவே அ∴றிணை, உயர்திணை, அம்சங்கள் பொருந்திய இந்நிலையை உற்று நோக்கில் விநாயகப் பெருமான் தேவராய், மனிதராய், பூதராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய் எல்லாமாய் திகழ்கிறார் என்பது புலனாகும்.

**வினா : 6.** விநாயகப் பெருமானின் ஐந்து கரங்களிலும் உள்ளவை எவை?

**விடை :**
1. துதிக்கையில் நீர்க்குடம்
2. மேல் வலது கையில் - அங்குசம்
3 மேல் இடது கையில் - பாசம்
4. கீழ் வலது கையில் ஒடிந்த தந்தம்
5. கீழ் இடது கையில் - மோதகம்

**வினா : 7.** விநாயகப் பெருமானின் பதினாறு வடிவங்களில் பெயர்கள் எவை?

**விடை :**

| | | |
|---|---|---|
| 1. பாலகணபதி | 6. பிர்மகணபதி | 11. ஹேரம்ப கணபதி |
| 2. தருணகணபதி | 7. பிங்களகணபதி | 12. லஷ்மீ கணபதி |
| 3. பக்திகணபதி | 8. உச்சிஷ்டகணபதி | 13. மஹா கணபதி |
| 4. வீரகணபதி | 9. விக்ன கணபதி | 14. விஜய கணபதி |
| 5. சக்திகணபதி | 10. ஷிப்ரகணபதி | 15. ந்ருத்தகணபதி |
| | | 16. ஊர்த்வகணபதி |

**வினா : 8.** வலம்புரி விநாயகர், இடம்புரி விநாயகர் என்று கூறுவது ஏன்?

**விடை :** துதிக்கை வலப்புறமாக வளைந்திருப்பின் வலம்புரி விநாயகர் என்றும், இடப்புறமாக வளைந்திருப்பின் இடம்புரிவிநாயகர் என்றும் அழைப்பர் (வலம்புரி விநாயகரை விஷேசமாகக் கொள்வர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா : 9.** விநாயகப் பெருமானுக்குரிய விரதங்கள் எவை?

**விடை :** மாதந்தோறும் வளர்பிறைச் சதுர்த்தி விரதம்
ஆடிமாதத்துச் செவ்வாய்க்கிழமைகள்
மார்கழி மாதத்தில் 21நாள் விநாயக ஷஷ்டி விரதம்
விஷேசதினம் ஆவணிச்சதுர்த்தி விரதம்

**வினா : 10.** விநாயகருக்கு உரிய பத்திரங்கள் எவை?
(பத்திரம் - வில்வவகை)

**விடை :**

| | | |
|---|---|---|
| 1. முல்லை | 8. நாயுருவி | 15. அரளி |
| 2. வில்வம் | 9. எருக்கலை | 16. மருதை |
| 3. கரிசிலாங்கண்ணீ | 10. விளாத்தி | 17. மாதுளை |
| 4. ஊமத்தை | 11. விஷ்ணுகிராந்தி | 18. மரு |
| 5. இலந்தை | 12. தேவதாரு | 19. ஜாதிமல்லி |
| 6. வன்னி | 13. அரசு | 20. அகத்தி |
| 7. வெள்ளெருக்கு | 14. தாழை | 21. அறுகு |

**வினா : 11.** விநாயகருக்கு உரிய நிவேதனப் பொருட்கள் எவை?

**விடை :** மோதகம், அவல், கடலை, பொரி, எள்ளுருண்டை, பயறு, தேங்காய், மாம்பழம், பால், தேன், கற்கண்டு, வள்ளிக்கிழங்கு.

**வினா : 12.** விநாயகரை வழிபடும் போது எவ்வாறு வழிபடவேண்டும்?

**விடை :** நமது தலையில் குட்டி, காதுகளைப் பிடித்து தோப்புக்கரணம் போட்டு வணங்க வேண்டும்.

**வினா : 13.** விநாயகர் முன் மூன்று முறையா? ஐந்து முறையா? தலையில் குட்டி வணங்க வேண்டும்.

**விடை :** கைகளை நேராகவும், விரல்களை முஷ்டியாக பிடித்து ஐந்துமுறை தலையில் குட்டி வணங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா : 14. விநாயகப் பெருமான் முன் மூன்று முறைதானே தலையில் குட்டி வணங்குகிறார்கள். ஐந்து முறை குட்ட வேண்டும் என்பதன் விளக்கம் என்ன?

விடை : மூன்று முறை குட்டி வழிபடுவது ராக்ஷதகுட்டு. ஐந்து முறை குட்டி வழிபடுவது தேவகுட்டு

வினா : 15. ராக்ஷத குட்டு, தேவ குட்டு, இதன் விளக்கம் என்ன?

விடை : கஜமுகாசுரனால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் தினமும் அவன்முன் தமது தலையில் மூன்று முறை குட்ட வேண்டும் என கட்டளையிட்டிருந்தான் அதனால் தேவர்கள் கஜமுகாசுரன் முன் மூன்று முறை குட்டி வணங்கினார்கள்.

விநாயகர் அருளால் கஜமுகாசுரன் அழிந்தபின் தேவர்கள் விநாயகரை நோக்கி, சுவாமி இதுவரை காலம் கஜமுகாசுரன் முன் மூன்றுமுறை குட்டி வணங்கி வந்தோம் இப்போது தேவரீர் எங்களைக் காத்து அசுரனை அழித்துள்ளீர்கள் எனவே தங்களின் முன் ஐந்துமுறை குட்டி வணங்குகிறோம். என கூறி தமது தலையில் ஐந்துமுறை தேவர்கள் குட்டி வணங்கினார்கள்.

பயத்தின் காரணமாக கஜமுகாசுரனுக்கு முன் மூன்றுமுறை குட்டி வணங்கியது அசுரகுட்டு என்றும் அசுரனிடமிருந்து எம்மைக் காத்த விநாயகர் முன் ஐந்து முறை குட்டி வணங்குவது தேவகுட்டு என்றும் அழைக்கப்படும்

வினா : 16. ஐந்துமுறை குட்டி வணங்க வேண்டும் என்பதற்கு ஆகமத்தில் ஏதேனும் ஆதாரம் உண்டா?

விடை : ஆம். காரணாகமத்தில் ஒரு சுலோகம் கூறப்பட்டுள்ளது. அதனை இங்கு தருகிறேன்.

முஷ்டி முத்ராம் ப்ரகுர்வீத மத்யமாங்குலி மத்யமே
மஸ்தகம் தாடயித்வா தப்லாவயேத் அமிர்தம் தத:
விநாயக மநுஷ் ம்ருத்ய குட்டனம் பஞ்சவாரகம்
சுக்லாம் பரதம் இதி பஞ்சதா பாலனகுட்டநம் க்ருத்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முஷ்டிமுத்ராம் - கட்டைவிரலை உள்ளே மடித்து ஏனைய நான்கு விரல்களாலும் பொத்திப் பிடிப்பது முஷ்டி முத்திரை)
(மத்ய - நடு)
(அங்குலி - விரல்)
(பஞ்ச - ஐந்து)
(குட்டனம் - குட்டுதல்)

எனவே முஷ்டி முத்திரையாகப்பிடித்து நடுவிரல் நடுமொழியினால் ஐந்துமுறை குட்டுவதே உத்தமோத்தமமாகும். (வேண்டும் வரம் கிடைக்கும்)

எனவே நாமும் விநாயகப் பெருமானின் முன்னிலையில் கைகளை நேராகப்பிடித்து முஷ்டி முத்திரையினால் ஐந்துமுறை குட்டி வணங்கி விநாயகப் பெருமானின் அருளைப் பெறுவோம்.


**சமய, இதிகாச, ஜோதிட சம்பந்தமான கட்டுரைகள் எழுதி அனுப்ப விரும்புவோர் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

*(தரமான கட்டுரைகள் அடுத்த மலரில் பிரசுரிக்கப்படும்.)*

ஆசிரியர், அருள்ஜோதி
**சர்வதேச இந்துமத குருபீடம்**
90/22, ஜோசப் டயஸ் லேன்
கொழும்பு - 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையர் பகுதி

♣♣♣♣♣♣♣♣

## மங்கல மங்கையர்க்கு சில அறிவுரைகள்

- குருஜீ -

1. தினமும் அதிகாலைகயில் நித்திரைவிட்டு எழுந்திருக்கும் போது உங்கள் உள்ளங்கைகள் இரண்டையும் சேர்த்துவைத்துக் கொண்டு உங்கள் இஷ்ட தெய்வங்களை மனதில் நினைத்து இன்றைய பொழுது நல்ல பொழுதாக அமைய வேண்டுமென பிரார்த்தனை செய்யுங்கள்.

   அன்றைய பொழுது நன்மையாக அமையும்.

2. காலைக்கடன்களை நிறைவுசெய்து, வீட்டு வாசலில் மஞ்சள் நீர் தெளித்து மங்கல கோலமிட்டு சாம்பிராணி தூபம் போட்டு பின்னர் காச்சிய பாலை ஒரு பாத்திரத்தில் எடுத்து சுவாமி அறையில் வைத்து தீபம் ஏற்றி வழிபடுங்கள்.

   மன அமைதியும், தெய்வ சான்னித்யமும் உண்டாகும்.

3. உங்கள் இல்லத்திற்கு வரும் சுமங்கலிப்பெண்களை மனமார வரவேற்று இனிமையாக உரையாடி அவர்கள் புறப்படும் போது குங்குமம் கொடுத்து வழிஅனுப்புங்கள். குடும்பத்தில் அமைதியும், சந்தோஷமும் உண்டாகும்.

4. சாயங்கால வேளையில் முகம் அலம்பி, நெற்றியில் விபூதி, குங்குமத் திலகமிட்டு, சாம்பிராணி தூபம் இட்டு சுவாமி அறையில் தீபத்தை ஏற்றி ஐந்து நிமிடம் ஸ்தோத்திரம் செய்யுங்கள் உங்கள் மனக்கஷ்டம், பணக்கஷ்டம் நீங்கி குடும்ப அமைதி, ஏற்படும். மஹால’மீயின் பரிபூரண அருளால் கணவன் - மனைவி உறவு சந்தோஷமாக என்றுமே நிலைத்திருக்கும்

   சாயங்காலத்தில் தீபம் ஏற்றும் இல்லத்திற்கு மனமிரங்கி மஹால’மீயே நேரில் வந்து அருள்வாள் என்பது ஐதீகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கேற்றும் வேளையில் சுமங்கலிப்பெண்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது. விளக்கேற்றி ஸ்தோத்திரம் செய்த பின்பே வெளியில் செல்ல வேண்டும்.

5 சுமங்கலிப் பெண்கள் கணவன் உயிரோடு இருக்கும்போது எந்தக் காரணத்தைக் கொண்டும் திருமாங்கல்யத்தை கழுத்தைவிட்டு கழற்றக் கூடாது.

திருமாங்கல்யம் மஞ்சள் நூலிலேயே கோர்த்து கட்டப்பட வேண்டும் என்பது சாஸ்திரவிதி.

இன்று நாகரீகம் என எண்ணி திருமாங்கல்யத்தை தங்கச்சங்கிலியில் கோர்த்துக் கொள்கிறார்கள் அதனால் திருடர்களுக்குப் பயந்து சங்கிலியுடன் தாலியையும் கழற்றி வைத்து விடுகிறார்கள். இது கணவனின் ஆயுளைக் குறைக்கும்.

திருமணமாகி கழுத்தில் திருமாங்கல்யம் இல்லாத பெண், வி-தந்து : (விதவை) என்பதே அர்த்தம்

6. பெண்கள் வீட்டினுள் காரணமில்லாமல் தலைவிரி கோலமாக இருக்கக்கூடாது. வாசற்படிகளில் அமர்ந்து தலைவாரக்கூடாது. நெற்றியிலும், உச்சியிலும் குங்குமம் இல்லாமல் இருக்கக்கூடாது. குங்குமத்தை தவிர வேறு (சாந்து, ஒட்டுப்பொட்டு) பொருட்களை கண்டிப்பாக சுமங்கலிப் பெண்கள் அணியக்கூடாது குங்குமம் கணவனுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கும்

(சாவித்திரியின் நெற்றியில் இருந்த குங்குமம், காலனையே வென்று சத்தியவானுக்கு ஆயுளைக் கொடுத்தது)


நாகரீக ஒட்டுப் பொட்டுகளை சுமங்கலிப்பெண்கள் வைப்பதால் கணவரின் ஆயுளைக் ஒவ்வொருநாளாகக் குறைக்கும். எனவே குங்குமப்பொட்டுவைத்து தீர்க்க சுமங்கலியாக வாழுங்கள்.

பெண்கள் பூஷணிக்காயை வெட்டக்கூடாது. கர்ப்பிணிப் பெண்கள் தேங்காயை உடைக்கக் கூடாது, இரவில் வீட்டைப் பெருக்கக்கூடாது. காரணம் - மாலையில் விளக்குஏற்றியபின் வீட்டுக்கு இரவுவேளையில் மஹாலக்ஷ்மீ வந்து தங்கக் கூடும் ஐதீகம்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட குருமார்களின் ஒரு பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனைக் கூட்டம்



சர்வதேச இந்துமத குருபீட ஸ்தாபக தலைவர் ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட குருமார்களின் ஒரு பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"சாமியே சரணம் ஐயப்பா"

# அகில இலங்கை சபரிமலை
# ஸ்ரீ சாஸ்தாபீடம் நடாத்தும்

## 17 வது ஆண்டு

# மகரஜோதிப் பெருவிழா

(48 நாட்கள் மண்டலபூஜை)

**பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 1ம் திகதி**

**17.11.1999 முதல் 03.01.2000 வரை**

**மலையாள ஐதீகப்படி ஸ்ரீ ஐயப்பசுவாமி**
**விரத நியமப்படி சபரிமலை யாத்திரை செல்லும்**
**ஐயப்ப பக்தர்களுக்கு கார்த்திகை 1ம் திகதி**
**குருஸ்வாமி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் அவர்களினால்**
**விரதமாலை அணிவிக்கப்படும்.**

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

ஸ்ரீஷடாக்ஷர சரவணபவசர்மா
(நிர்வாகப் பணிப்பாளர்)
சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம்
90/22 ஜோசப் டயஸ் லேன், கொழும்பு 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சர்வதேச இந்துமத குருபீடம்

(தலைமைச் செயலகம்)

## INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDAM

சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

ஆன்மீக மாத இதழ் சந்தாக்காரர்களுக்கு

வணக்கம்!

இலங்கை இந்துமத குருபீடாதிபதி சிவாகமஞானி அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஞாபகார்த்தமாக சர்வதேச இந்துமத குருபீடத்தினால் மாதந்தோறும் சிவாச்சாரியாரின் **அருள்ஜோதி** என்னும் ஆன்மீக மாத இதழ் வெளியிடப்பட்டு வருகின்றது. இம்மலரில் சமயக்கட்டுரைகள், வேத சிவாகம கட்டுரைகள், வினா விடைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இம்மலருக்கு ஆன்மீக அன்பர்கள் சந்தாகாரர்களாக சேர்ந்து எமது ஆன்மீகப் பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

இப்படிக்கு உண்மையுள்ள

**ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார்**

அகில இலங்கை சமாதான நீதவான்

**சர்வதேச இந்துமத குருபீடம்**

90/22 ஜோசப் டயஸ் லேன், புளூமெண்டால் வீதி, கொழும்பு - 15
தொலைபேசி : 527025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"சாமியே சரணம் ஐயப்பா"

# அகில இலங்கை சபரிமலை
# ஸ்ரீ சாஸ்தாபீடம் நடாத்தும்

## 17 வது ஆண்டு

# மகரஜோதிப் பெருவிழா

## (48 நாட்கள் மண்டலபூஜை)

**பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 1ம் திகதி**

**17.11.1999 முதல் 03.01.2000 வரை**

**மலையாள ஐதீகப்படி ஸ்ரீ ஐயப்பசுவாமி
விரத நியமப்படி சபரிமலை யாத்திரை செல்லும்
ஐயப்ப பக்தர்களுக்கு கார்த்திகை 1ம் திகதி
குருஸ்வாமி ஸ்ரீ ஐயப்பதாஸக் குருக்கள் அவர்களினா
விரதமாலை அணிவிக்கப்படும்.**

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

**ஸ்ரீஷடாக்ஷர சரவணபவசர்மா**
(நிர்வாகப் பணிப்பாளர்)
**சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம்**
90/22 ஜோசப் டயஸ் லேன், கொழும்பு 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org